தனவணிகன்

7.6.2002



ஆசிரியர்
வி.என். சிதம்பரம்

தனவணிகன்

7.6.2002



ஆசிரியர்
வி.என். சிதம்பரம்

தனவணிகன்

சமூக இலக்கிய மாத இதழ்

தனம் 3 — சித்ரபானு — ஜூன்
லாபம் 10 — ஆனி — 2002

ஆசிரியர் : வி.என். சிதம்பரம் செட்டியார் — இணையாசிரியர் : CT. [illegible]

108-109, நேதாஜி சாலை, முதல் தளம், மதுரை -625 001. போன் : 346206

விலை ரூ. 9.00 — ஆண்டுச்சந்தா ரூ. 100.00

வாழும் பட்டினத்தடிகள்...!

கடந்த மாதம் 96 ஊர் நகரத்தார்களையும் அழைத்து வெற்றி மாநாடாக நடத்திக்காட்டிய பெருமைக்குரிய நாச்சியப்ப சுவாமிகள் நகரத்தார் ஒவ்வொருவர் பார்வையிலும் பட்டினத்தாராகத் தரிசனம் தருகிறார்.

துறவுக்கூடத்திலிருந்து ஒரு சீர்திருத்தவாதியாகச் சமூகத்தைப் பார்க்கிறார். நகரத்தாரில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு மாறவேண்டும். 'மன்னோர் பின்னோர்' எனப் போற்றப்பெற்ற சமூகத்தில் ஏன் இந்தத் தாழ்வுநிலை? இந்நிலையை நீக்கிட நம் சமூகம் என்ன செய்யப்போகிறது? என ஒவ்வொருவரின் உள்ளக்கருத்துக்களைப் பெறுவதற்காகத்தான் சுவாமிகள் அந்த எழுச்சிமிகு மாநாட்டைக் கூட்டியிருந்ததை உணர முடிகிறது.



தான் சுயமாக ஈட்டிய செல்வத்தையெல்லாம் தன்னைச்சார்ந்த சமூகத்தினருக்குப் பயன்பட வேண்டும் என்ற பொதுவுடமை தீர்க்கதரிசியாக விளங்குகிறார். வினோபாஜி 'பூமிதான இயக்கத்தைத் தொடங்கி தனது நிலபுலன்களையெல்லாம் நிலமற்ற ஏழை

எளியோருக்கு வழங்கி வணக்கத்திற்குரிய மகானாக இன்றைக்கும் போற்றப்பெறுகிறார்.

பட்டினத்தடிகள் தன் செல்வத்தை வறியவர்களுக்கு வழங்கிவிட்டு துறவறம் மேற்கொண்டார். ஆனால் சுவாமிகள் துறவியாகப் பட்டமேற்றுத் தன் தொழிலில் ஈட்டிய செல்வத்தை ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உதவிட முன்வந்ததைப் பார்க்கும்போது நம் கண்களுக்கு வாழும் பட்டினத்தடிகளாகத் தோன்றும் நாச்சியப்ப அடிகளைப் போற்றுவோம்..!

தனவணிகனின் அன்பான வேண்டுகோள்!

அச்சிடும்தாள், அஞ்சல் கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போவதால் தனவணிகன் சந்தா தொகை உயர்த்துவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஓராண்டுச்சந்தா– ரூ.100/– ஆகவும், வைப்புத் தொகை (ஆயுள் சந்தா) ரூ. 1000/– ஆகவும் சற்று உயர்த்தப்படுகிறது. வாசகர்கள் தங்கள் ஆதரவை தொடர்ந்து நல்கிட வேண்டுகிறோம்.

– ஆசிரியர்.

தனவணிகன் சந்தா படிவம்

நான் தனவணிகன் திங்களிதழின் சந்தாதாரராக விரும்புகிறேன். ஆண்டு சந்தா ரூ. 100-/ ஆயுள் (டெபாசிட்) சந்தா ரூ. 1000-/ (ரூபாய் .... மட்டும்) பணவிடைத்தாள் (எம்.ஓ) கேட்புவரைவோலை (டிமாண்ட் டிராஃப்ட்) **'தனவணிகன்'** என்ற பெயருக்கு அனுப்பியுள்ளேன்.

சந்தாதாரர் முகவரி: ....

....

....

படிவம் அனுப்பப்படவேண்டிய முகவரி:

ஆசிரியர், தனவணிகன்,

108-109, நேதாஜி ரோடு, மதுரை - 625 001. போன்: 346206

வெளிநாடு ஆண்டு சந்தா ரூ. 900-00

வெளிநாடு ஆயுள் சந்தா ரூ. 4,500-00

30-5

வி.என். சிதம்பரம்

பெருமைக்குரிய நகரத்தார்கள்

கடந்த மே மாதம் 3,4,5 ஆகிய தேதிகளில் கோவிலூரில் தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார்களையும் அழைத்துச் சிறப்பான மாநாடு நடத்திக் காட்டிய பெருமை நமது சீர்வளர் சீர் நாச்சியப்பசுவாமிகளையே சாரும்.

அந்த மாநாட்டில் "நகரத்தார் ரத்தினங்கள்" என நீதியரசர் அரு. லெட்சுமணன், முனைவர் தமிழண்ணல், முனைவர் முத்துக்கருப்பன், சொ.சொ. மீனாட்சி சுந்தரம் ஐ.ஏ.எஸ்., ஆகியோரைத் தேர்ந்தெடுத்துத் தங்கப்பதக்கம் வழங்கி சுவாமிகள் பாராட்டினார்கள்.

அந்த ரத்தினங்களில் ஒருவரான சொ.சொ. மீனாட்சிசுந்தரம் அவர்களைத்தான் பெருமைக்குரிய நகரத்தார் பகுதியில் எழுதிட விழைகிறேன்.

சொ.சொ. மீனாட்சி சுந்தரம் ஐ.ஏ.எஸ் அவர்கள் தற்போது பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளித்துறையில் கூடுதல் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். இந்திய அரசால் கர்நாடக மாநிலப் பணிகளுக்கான ஐ.ஏ.எஸ். அதிகாரியாக நியமிக்கப் பெற்றவர். அந்த மாநில அரசின் நிர்வாகத்திலும், மத்திய அரசுப் பணிகளிலும் மட்டுமே பணியாற்ற முடியும் வேறு மாநிலங்களுக்கு மாறுதல் செய்து கொள்ள முடியாது, என்பதால் கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சியில் திறமை மிகுந்த உயரதிகாரியாக

ஒவ்வொரு துறையிலும் முத்திரை பதித்துச் சிறந்த அதிகாரியாகக் கன்னடர் பூமியில் ஒரு தமிழர் பவனிவருகிறார்... என்பதைவிட நமது நகரத்தார் என்பது மிகவும் பெருமையல்லவா...!

இவருக்குத் தேவகோட்டை தான் சொந்த ஊர் சொர்ணலிங்கம் செட்டியார் – மீனாட்சி ஆச்சி தம்பதியருக்கு இளைய மகனாகப் பிறந்தவர். இவரின் மூத்த சகோதரர் தான் பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள். இவர்கள் இருவரின் பெயருமே மீனாட்சி சுந்தரம் தான். இவர்களின் பேராசிரியர் டாக்டர். வ.சுப. மாணிக்கம் அவர்களின் அறிவுரையின் படி மூத்தவர் பெயரை சொ.சொ.மீ. சுந்தரமாகச் சுருக்கிக் கொண்டார். இந்த பெயர்ச் சுருக்கம் ஏன்?

டாக்டர் வ.சுப. அவர்கள் "கலைக்கழகம்" என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கவிதை, கட்டுரை, ஓவியம் என மாணவர்களிடம் ஆர்வத்தை ஊட்டி வளர்த்து வந்தார். ஒருமுறை ''சென்னை மாணவர் மன்றம்'' அறிவித்த போட்டியில் கவிதைக்கான முதல் பரிசை சொ.சொ.மீ. சுந்தரமும், கட்டுரைக்கான முதல் பரிசை சொ.சொ. மீனாட்சி சுந்தரமும் அண்ணன், தம்பி இருவருமே பெற்றனர்.

அப்போது சொ.சொ.மீ. சுந்தரம் பி.காம்., தம்பி மீனாட்சி சுந்தரம் பி.எஸ்.ஸி.,–யும் படித்து வந்தனர். பரிசு பெற்றதற்கான சான்றிதழில் கவிதை முதல் பரிசு இளையவரான மீனாட்சிசுந்தரம் பி.எஸ்.ஸி., என்றும், கட்டுரை முதல் பரிசு மூத்தவரான சொ.சொ.மீ. சுந்தரம் பி.காம்., எனவும் மாற்றி எழுதிவிட்டார்கள். வ.சுப. அவர்கள் தான் ஒரே பெயர் கொண்ட உங்கள் இருவரில் ஒருவர் சொ.சொ.மீ. சுந்தரம் எனச் சுருக்கிக் கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறினாராம். அப்படித்தான் சொ.சொ.மீ. சுந்தரம் என்று பெயர் சுருக்கமானது.

மீனாட்சி சுந்தரம் இளமையிலிருந்து ஐ.ஏ.எஸ்., ஆகவேண்டும் என்ற லட்சிய வேட்கை கொண்டிருந்தார் என்பதையும் நானறிந்தேன். தேவகோட்டை நகரத்தார் மேநிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து, காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் இளநிலை அறிவியல் (பி.எஸ்.ஸி.,) பட்டமும், சென்னை இலயோலா கல்லூரியில் முதுநிலைப் பட்டமும் (எம்.எஸ்.ஸி., கணிதம்) பெற்றார். பிறகு கோவை பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரியில் ஓராண்டு காலம் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

இளமைக் காலத்திலேயே படிப்பில் முதல் மாணவனாகச் சிறந்து விளங்கினார்.



1966 ஆம் ஆண்டு ஐ.பி.எஸ்,. தேர்வில் வென்றார். அவரின் தந்தையார் சொர்ணலிங்கம் செட்டியார் தனது மகன் ஐ.ஏ.எஸ். ஆகவேண்டும் என்பதையே லட்சியமாகக் கொண்டிருந்தார். ஐ.பி.எஸ். வேண்டாம் என்ற தந்தையின் ஆணையை ஏற்று அந்தப் பணியை மறுத்துவிட்டார்.

அப்புறம் 1967 ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ். நேர்முகத் தேர்வு நடைபெற்ற பொழுது 1966–ல் ஐ.பி.எஸ். தேர்வு நடத்திய அதிகாரிகளே ஐ.ஏ.எஸ். நேர்முகத் தேர்வையும் நடத்தினர். அந்த அதிகாரிகளில் ஒருவர், "சென்ற ஆண்டு உங்களை ஐ.பி.எஸ். க்குத் தேர்வு செய்தோம்! நீங்கள், வேண்டாம் என்றீர்களே! இப்போதும் ஐ.பி.எஸ். கொடுத்தால் ஏற்றுக் கொள்வீர்களா ?" என்று கேட்டார். அதற்குக் கொஞ்சமும் தயக்கமின்றி, "இப்போதும் மறுத்து விடுவேன்! எனது லட்சியம் ஐ.ஏ.எஸ். ஆவது மட்டும் தான்!" என்று மீனாட்சி சுந்தரம் உறுதிபடக் கூறினார். உடனே அதிகாரிகள் கூடித் தகுதியின் அடிப்படையில் ஐ.ஏ.எஸ். வழங்கினார்கள். இப்படித் தந்தையின் லட்சியத்திற்கும் மைந்தனாக விளங்கிய லட்சியப் புத்திரனல்லவா மீனாட்சிசுந்தரம்! ஐ.ஏ.எஸ். தேறிய பிறகு பொருளாதார இயலில் ஆராய்ச்சி செய்து பி.எச்.டி., பட்டத்தை புதுடில்லி ஜமிலா மிலியா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் பெற்றார்.

1970 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கர்நாடக மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றி, துறை சம்பந்தமாக லண்டன், அமெரிக்கா பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, யுகோஸ்லேவியா, இத்தாலி, ஆஸ்திரேலியா நியுஸிலாந்து, சிங்கப்பூர், ஹாங்காங், மலேசியா, ஸ்பெயின், கனடா, அல்ஜீரியா, ஜப்பான், தாய்லாந்து, தென் கொரியா, டென்மார்க், ஹாலந்து, கென்யா, பாகிஸ்தான், நைஜீரியா, பங்களாதேஷ், வியட்னாம் போன்ற நாடுகளுக்கெல்லாம் அரசு முறைப் பயணமாகச் சென்று அங்கு நடைபெறும் துறை சார்ந்த கருத்தரங்குகளிலும், மாநாடுகளிலும் தனது துறையின் சார்பில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உலக அரங்கிலே நகரத்தாரின் ஓங்கு புகழாய் ஒளிர்ந்திருக்கிறார். ஏறத்தாழ உலக வரைபடத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளுக்குச் சென்றதால் உலகம் சுற்றிய முதல் தமிழர் ஏ.கே. செட்டியார் என்றால் இப்போது உலகம் சுற்றிய இரண்டாவது தமிழர் நமது மீனாட்சிசுந்தரம் தான் என்றே கூறலாம்.

பாராட்டும் விரும்பாத பண்பாளரான இவர் கர்நாடக மாநில முதல்வரின் முதன்மைச் செயலாளராகப் பணியாற்றி முத்திரை பதித்தவர். இவரின் திறமையை அறிந்த முன்னாள் பாரதப் பிரதமர் தேவகௌடா தனது இணைச் செயலாளராக அமர்த்திக் கொண்டார். நாமெல்லாம் பெருமைப் படக்கூடிய ஆற்றல்மிக்கவராக இவர் விளங்குகிறார். என்பதே நம்மவர்கள்

பெற்ற பெரும்பேறு. இவரின் கல்வியறிவும், விடா முயற்சியும், லட்சிய உணர்வும் நமது நகரத்தார் இளைஞர்கள் ஒவ்வொருவரும் பின்பற்றத்தக்கன. நகரத்தார்களில் முதலாவது ஐ.ஏ.எஸ் பட்டம் பெற்றவர் ஏவி. மெய்யப்ப செட்டியார் மருமகனான வள்ளியப்ப செட்டியார் அவர்கள். இரண்டாவது ஐ.ஏ.எஸ். பட்டம் பெற்றவர் நமது சொ.சொ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் தான். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை மெய்ப்பித்துக் கொண்டிருக்கும் நகரத்தாரின் இந்த அருந்தவச் செல்வர் மீனாட்சிசுந்தரம் ஐ.ஏ.எஸ். அவர்கள் இன்னும் பல சாதனைச் சிகரங்களை எட்டட்டும்... இளைய சமுதாயம் அவர் வழியைத் தொடரட்டும்...

96 ஊர் நகரத்தார் மாநாட்டில் "நகரத்தார் நல்வாழ்வு அறநிலை"க்காக ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டு நிதி தந்தவர்களும் தருவதாக அறிவித்தவர்களும்...

வி.என். சிதம்பரம் செட்டியார் (தனவணிகன் ஆசிரியர்)	ரூ. ஒரு லட்சம்
டாக்டர். எம்.ஆர். முத்தையா (செந்தில் நர்ஸிங் ஹோம், மதுரை)	ரூ. ஒரு லட்சம்
வெள்ளவத்தை சுப்பிரமணியன் செட்டியார் (கொழும்பு)	ரூ. ஒரு லட்சம்
எஸ்.ஆர்எம். பிஎல். (பள்ளத்தூர்)	ரூ. ஒரு லட்சம்
நெற்குப்பை பி. கனகசபை செட்டியார்	ரூ. ஒரு லட்சம்
மதுரை எம். கண்ணப்ப செட்டியார்	ரூ. ஒரு லட்சம்
நெற்குப்பை டி. சிதம்பரம் செட்டியார்	ரூ. ஒரு லட்சம்
தேவகோட்டை கருணாநிதி செட்டியார்	ரூ. ஒரு லட்சம்
„ „ லோட்டஸ் வெங்கடாசலம் செட்டியார்	ரூ. 81 ஆயிரம்
கண்டவராயன்பட்டி ஏஎல்.எஸ். அழகப்ப செட்டியார்	ரூ. ஐம்பதாயிரம்
ச. மெய்யப்பன் (மணிவாசகர் பதிப்பகம்)	ரூ. ஐம்பதாயிரம்
எம்.ஆர். ராமையா செட்டியார் (கோட்டையூர்)	ரூ. ஐம்பதாயிரம்
எஸ்.ஒ.ஆர்எம். சிடி. சேது செட்டியார் (கண்டவராயன் பட்டி)	ரூ. ஐம்பதாயிரம்
கண்டவராயன்பட்டி இளையாற்றங்குடி கோயில் ஒக்கூர் பிரிவைச் சேர்ந்த 71 புள்ளிகள் சார்பில்	ரூ. 71 ஆயிரம்

இல்ல மங்கல விழாக்கள்...!

நெற்குப்பை பழ. அடைக்கப்ப செட்டியார் புதல்வன் சுவாமிநாதன் M.B.A., CTM (மணமகன்) நெற்குப்பை பெரி.பழ. முருகப்ப செட்டியார் புதல்வி நாச்சம்மை M.B.A., (மணமகள்) இவர்களின் திருமணம் 15–5–2002 அன்று மணமகள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பொன்புதுப்பட்டி சித.கதி. சிதம்பரம் செட்டியார் பேரனும், சித. சுந்தரம் செட்டியார் புதல்வனுமான கதிரேசன் D.Pharm., (மணமகன்) ஆ.தெக்கூர் மது.பழ.சுப. ஆறுமுகம் செட்டியார் பேத்தியும், தியாகராஜன் செட்டியார் புதல்வியுமான நாச்சம்மை B.B.M., (மணமகள்) இவர்களின் திருமணம் 24–5–02 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஒக்கூர் சிக.கரு.கண.ராம. கண்ணப்ப செட்டியார் – கண்ணாத்தாள் ஆச்சி தம்பதியரின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா 18–5–02 அன்று ஒக்கூரில் சிறப்பாக நடைபெற்றது. மணிவிழாவிற்கான ஏற்பாடுகளைத் தம்பதியரின் புதல்வர்கள் ராமநாதன், பழனியப்பன், தியாகராஜன் மற்றும் உறவினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

நற்சாந்துப்பட்டி மு.கி.மு. கிருஷ்ணப்ப செட்டியார் – வள்ளியம்மை ஆச்சி தம்பதியரின் சதாபிஷேக விழா 28–4–02 அன்று அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. தம்பதியரின் புதல்வர்கள் முத்துராமன B.Sc., ராமையா B.Sc., கிருஷ்ணன் B.A., மற்றும் உறவினர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

அரிமழம் செ. சபாரெத்தினம் செட்டியார் – உமையாள் ஆச்சி தம்பதியருக்கு அறுபதாம் நிறைவு மணிவிழா 12–5–02 அன்று சிறப்பாக நடைபெற்றது.

வி.லெட்சுமிபுரம் ராமசுப்பிரமணியம் செட்டியார் புதல்வன் சரவண கிருஷ்ணன் (SARA) (மணமகன்) பூலாங்குறிச்சி சொ.பழ. பழநியப்ப செட்டியார் பேத்தியும், பழ. சொக்கலிங்கம் செட்டியார் புதல்வியுமான கல்யாணி (M.C.A.,) (மணமகள்) இவர்களின் திருமணம் 24–5–02 அன்று மணமகள் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நாடாளுமன்றத்தில் தமிழக உறுப்பினர்களின் ஒற்றுமை...!

மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணயத்தில் (எஸ்.எஸ்.சி) கடந்த 1999 ஆம் ஆண்டு தேர்வு எழுதியவர்களில் 1885 பேரை வேலை நியமனத்திற்குத் தேர்வாணையம் பரிந்துரை செய்துள்ளது. இதில் பீகாரிலிருந்து 1100 பேரும், உ.பி.யிலிருந்து 214 பேரும் ஆகமொத்தம் 1334 பேர் இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்தவர்களே பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். ஆனால் பிறமொழி பேசும் மாநிலங்களான கேரளா 52, ஆந்திரா 18, கர்நாடகா 12, ஆனால் அதைவிட தமிழகத்திலிருந்து வெறும் 3பேர் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். வடகிழக்கு மாநிலங்களிலிருந்து மொத்தம் 11 பேரும் இதில் அடக்கம். ஏன் இந்த ஓரவஞ்சனை ? என்று நாடாளுமன்ற மக்களவையில் உரையாற்றிய வைகோ. குரல் எழுப்பினார்.

எஸ்.எஸ்.சி தேர்வில் பங்குகொள்பவர்கள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் மட்டுமே தேர்வு எழுத முடிகிறது. தென்னிந்தியாவிலிருந்தும், வடகிழக்கு மாகாணங்களிலிருந்தும் தேர்வில் பங்கேற்றவர்களில் 90% சதவீதத்திற்கு மேற்பட்டோர் தோல்வியைத் தழுவியுள்ளனர். ஆங்கிலத்தில் தேர்வு எழுதியவர்கள், இந்தியில் தேர்வு எழுதியவர்களுக்குச் சமமாக நடத்தப்படவில்லை என்பதையே தேர்வாணைய முடிவு வெளிப்படுத்துகிறது. ஆகவே மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் எஸ்.எஸ்.சி தேர்வுகளில் அரசமைப்புச் சட்டத்தின் எட்டாம்இணைப்புப் பட்டியலில் அடங்கியுள்ள (தமிழ் உட்பட) அனைத்து மொழிகளையும் தேர்வு மொழியாகப் பயன்படுத்தலாமா என்பது பற்றி மத்திய அரசு பரிசீலிப்பது அவசியமான பொறுப்பாகும்.

இது தொடர்பாக மாநில அரசுகளுடன் விரிவான ஆலோசனை நடத்த வேண்டியதும் மத்திய அரசின் கடமையாகும் என்று ஏற்கனவே மத்திய நிர்வாகத் தீர்ப்பாயத்தில் கூறப்பட்டுள்ளது என்பதையும் வைகோ. (ம.தி.மு.க) சுட்டிக்காட்டிப் பேசினார். உடனே அவரின் கருத்துக்கு வலிமை சேர்க்கும் வண்ணமாக தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களான தலித் எழில்மலை (அ.தி.மு.க) பழனிமாணிக்கம் (தி.மு.க) பொன்னுச்சாமி (பா.ம.க) ஆகியோர் ஒன்றுபட்டு ஆதரவு தெரிவித்துப் பேசியதும் காங்கிரஸ், மார்க்கிஸ்ட், தெலுங்கு தேசம் போன்ற கட்சிகளும் ஆதரவுக் குரல் கொடுத்தன. இந்தப் பிரச்சினையைச் சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரமோத் மகாஜன் உறுதியளித்தார். கட்சி பேதங்களை மறந்து தமிழக நலனுக்காக குரல் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒற்றுமையைப் பாராட்ட வேண்டுமல்லவா!

தாயும்

ஒரு ரயில் வேகமாப் போய்க்கிட்டிருக்கு. அதுலே ஒரு பெரிய அதிகாரி போய்க்கிட்டிருக்கார். ஐ.ஏ.எஸ் அதிகாரி. ஒரு ஊர்லே ரயில் நின்னுது. அவர் இறங்கினார். கூலி... கூலி...ன்னு கூப்பிட்டார்.


அதே ரயில்லே வந்த இன்னொருத்தர் இதைக் கவனிச்சார்.


உங்க 'லக்கேஜ்' எது?–ன்னு கேட்டார். இதுக்கு அந்த அதிகாரி தன்னுடைய கைப்பையைக் காட்டினார்... 'இதுதான் என் லக்கேஜ்!'–ன்னார். அது ஒரு சின்ன பைதான்.

''இதுக்காகவா சுமை தூக்கறவங்களைக் கூப்பிடறீங்க? என்கிட்டே கொடுங்க... நான் எடுத்துக்கிட்டு வர்றேன்...''ன்னார்.

அந்த அதிகாரியும் பதில் பேசாமே அந்தப் பையை அவர்கிட்டே கொடுத்தார்.

அவர் அதை வாங்கி சுமந்துகிட்டு வந்தார். அதிகாரி போக வேண்டிய இடம் வரைக்கும் கூடவே வந்தார். பையை அவர்கிட்டே கொடுத்தார். அவர் அதை வாங்கிக்கிட்டு ''கூலி எவ்வளவு?''–ன்னு கேட்டார். இதுக்கு அவரு சொன்னார்...





''கூலி வேண்டாம்! இதை என்னுடைய சேவையா வச்சுக்குங்க...!''

அப்படின்னு சொல்லிப்புட்டு அங்கேயிருந்து போயிட்டார்.

அவர் போன பிறகு இந்த அதிகாரி தான் போக வேண்டிய இடத்துக்குப் புறப்பட்டார்.

அவர் ஒரு பெரிய பேச்சாளருடைய பேச்சைக் கேக்கறத்துக்காக அங்கே வந்திருக்கார்... அதனாலே கூட்டம் நடக்கற இடத்துக்குப் போனார்.

ஏகப்பட்ட கூட்டம். இவரு முண்டியடிச்சிக்கிட்டு முன்னாடி போய் ஒரு இடம் பார்த்து உக்கார்ந்தார். எல்லாரும் ஆவலோடு உக்கார்ந்திருக்காங்க. மேடையிலே அறிவிப்பு வந்தது...

இப்போது ஈசுவர சந்திர வித்யாசாகர் பேசுவார் அப்படின்னு சொன்னாங்க.

அவ்வளவுதான்... எல்லாரும் ஆவலோட மேடையைப் பார்க்கிறாங்க இந்த அதிகாரியும் பார்க்கிறார்.

மகனும்...!

ஈசுவர சந்திர வித்யாசாகர் மேடைக்கு வர்றார். இவருக்கு ஆச்சரியமாப் போச்சு!

ரயில்வே ஸ்டேஷன்லே தன்னுடைய லக்கேஜை சுமந்தாரே... அவர்தான் மேடையிலே வந்து நிக்கறார். அவர் தான் ஈசுவர சந்திர வித்யாசாகர்.

அவரைப் பார்த்தவுடனே இவரு தன்னுடைய செயலுக்காக வெட்கப்பட்டாராம்.!

வித்யாசாகர்... ரொம்பப் பெரிய மனிதர். இருந்தாலும் அவர் குடும்பம் ரொம்ப ஏழ்மை. வீட்டுலே வயசான தாயார்.

இவர் படிச்சி முடிச்சதும் ஓர் உத்தியோகத்துலே சேர்ந்தார். சம்பாதிக்கிற பணத்தை சிக்கனமா செலவு பண்ணினார். மிச்சத்தைக் கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வச்சார். அம்மா உடுத்தியிருந்த கந்தல் ஆடையைப் பார்த்தார். இவருக்கு மனசு உறுத்தலா இருந்தது. ஒருநாள் அம்மா பக்கத்துலே உக்கார்ந்து கேட்டார்.

"அம்மா! நான் கொஞ்சம் பணம் சேர்த்து வச்சிருக்கிறேன். உனக்கு ஆசை ஏதாவது இருந்தா சொல்லு... அதை நிறைவேத்தி வைக்க முயற்சி செய்யறேன்!"—னார்.

"மகனே! எனக்கு எந்த ஆசையும் இல்லே... நீ நல்ல குணம் உடையவனா இருந்தா போதும்!"—ன்னாங்க அந்த அம்மா. கொஞ்ச நாள்லே இவருக்குப் பெரிய உத்தியோகம் ஒண்ணு கிடைச்சுது. வருமானமும் ஆயிரக்கணக்குலே வந்துது.

"அம்மா! இப்பவாவது சொல்லு... உன்னுடைய ஆசை எதுவா இருந்தாலும் நிறைவேத்தி வைக்கிறேன்!"—னார். இப்ப. அந்த அம்மா சொன்னாங்க:

"மகனே! எனக்கு ஒரு ஆசை இல்லே... மூன்று ஆசைகள் உண்டு! அதை நிறைவேற்றினா என் மனசு அமைதியடையும்!"—ன்னாங்க.

"என்னம்மா அது... உடனே சொல்லுங்க!"—ன்னார்.

"மகனே! நம் கிராமத்துலே... பிள்ளைங்க படிக்கறதுக்கு வசதி இல்லே... அதனாலே ஒரு பள்ளிக்கூடம் கட்டு!"

நம்ம மக்களை... சரியா கவனிக்கறதுக்கு யாருமில்லே... அதனாலே ஒரு ஆஸ்பத்திரி கட்டு!

மக்கள் குடிக்கறதுக்கு நல்ல தண்ணி இல்லாமே கஷ்டப்படறாங்க... அதுக்கு ஏதாவது ஏற்பாடு செய்!" அப்படின்னாங்க...

அவர் உடனே பள்ளிக்கூடம் கட்டினார்... ஆஸ்பத்திரி கட்டினார்... குடிநீர் கிணறுகளைத் தோண்டினார்.

அவர்தான் ஈஸ்வர சந்திர வித்யாசாகர்.

அம்மா—பிள்ளை—ன்னா அப்படி இருக்கணும்.

இன்னைக்கு அப்படியா இருக்கிறாங்க...?

மணிவிழா



நீதியரசர் அரு. லெட்சுமணன் – மீனாட்சி ஆச்சி தம்பதியரின் மணிவிழாவில் சென்னை மாநகர மேயர் மு.க. ஸ்டாலின் மற்றும் திருப்பதி தேவஸ்தான பட்டாச்சாரியார்கள் வாழ்த்தியபோது...

பீமரத சாந்தி விழா...!



எம்.ஏ. திருப்பதி செட்டியார் – சரஸ்வதி ஆச்சி தம்பதியரின் எழுபது நிறைவு பீமரத சாந்தி விழா மலாக்கா சன்னாசிமலை ஆண்டவர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மணவிழா....!



கண்டவராயன்பட்டி இராதகிருஷ்ண செட்டியார் புதல்வன் சேதுசரவணன் B.E., (ADP; Portland U.S.A) கானாடுகாத்தான் க.வெ.சித. சிதம்பரம் செட்டியார் பேத்தியும், சித. அழகப்பசெட்டியார் புதல்வியுமான மீனாட்சி B.C.A., இவர்களின் திருமணம் 24–4–02 அன்று கானாடுகாத்தான் மணமகள் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருப்பூட்டு விழா....!



வலையபட்டி என்.கேஆர். அருணாசலம் செட்டியார் பேத்தியும், என்.கேஆர்.ஏஆர். நாகப்ப செட்டியார் புதல்வியுமான சிட்டாள் M.Com., கண்டவராயன்பட்டி (S.PT) ஆர்எம்.எஸ். மாணிக்கம் செட்டியார் புதல்வன் திருமலைராஜா B.E., இவர்களின் திருமணம் 25–4–02 அன்று வலையப்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது.

சென்ற இதழில் (புதையல் 15) 1925ஆம் ஆண்டு ஊழியன் இதழில் இவர்களால் யாது பயன்? என்று கட்டுரை எழுதிய தமிழ்க்கடல் இராய.சொ. அவர்களின் மீதும், இதழின் மீதும் ராவ்பகதூர் ஆவி.பழ. சிதம்பரம் செட்டியார் தொடர்ந்த வழக்கும், நீதிபதி வழங்கிய தீர்ப்பு விபரமும் படியுங்களேன்...

குரோதன வருடம் (1925) மார்கழி மாதம் 23–ந் தேதி தேவகோட்டையில் வாய்தாப் போடப்பட்டிருந்து. அன்று ஊழியன் காரியஸ்தர் திரு. தே.வே. அருணாசலன் ஆஜராகியிருந்தார். இவ்வூர் மீனாட்சி சுந்தரேஸ்வர வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. என்.எஸ். வெங்கிட்டராமய்யர் நீதி ஸ்தலத்தின் முன் நின்று கொண்டிருந்தார். அவர் பரபரப்பாக

புதையல் : 16

ஊழியன் இதழின் மீது அவதூறு வழக்கு!

தேவகோட்டை சப்டிவிஷன் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள (1925ம் வருடம்) கசூஉரு–ம் வருஷத்திய ஸி.ஸி. கருகூ (159) நம்பர் வழக்கின் விபரம் வருமாறு: ராவ்பகதூர் ஏவி.பிஎல். சிதம்பரம் செட்டியார் (வாதி), காரைக்குடி ''ஊழியன்'' ஆசியர் ராய. சொக்கலிங்கன் (எதிரி)

இவ்வூர் ராவ்பகதூர் ஆவி.பழ. சிதம்பரம் செட்டியார் "ஊழியன்" ஆசிரியர் மீது (குரோதன வருடம் (1925) கார்த்திகை மாதம் கசு–2 (16ந் தேதி) பத்திரிகையில் இடி முழக்கத்தில் "இவர்களால் யாது பயன்"? என்று எழுதிய குறிப்புக் காரணமாக தேவகோட்டை சப்டிவிஷன் பஸ்டு கிளாஸ் மாஜிஸ்டிரேட்டிடம் இ.பி.கோ. ருOO வது (500–வது) பிரிவுப்படி ஓர் அவதூறு வழக்கு கொடுத்திருக்கிறார்.

காணப்பட்டார். வாதி பிற்பகலில் வருவதாகக் கம்பிச் செய்தி கிடைத்திருப்பதாக நீதி ஸ்தலத்தில் கூறப்பட்டது. எதிரிக்குப் பிராது நகல் கிடைக்கவில்லை யாதலாலும் எதிரி தரப்பு வக்கீல் மதுரை எஸ். சோம சுந்தரபாரதியார் அன்று ஆஜராக முடியாமையாலும் வாய்தா வேண்டுமென்று எதிரி தரப்புக்கு ஆஜராகியிருந்த வக்கீல் சிவசுப்பிரமணிய அய்யர் கேட்டார். வாய்தா கொடுக்க முடியாதென நீதிபதியால் மறுக்கப்பட்டது. மாலை (3–00 மணிக்கு) வாதியும், வாதி தரப்புக்குச் சாட்சிக்குக் குறிப்பிட்ட பலரில் பள்ளத்தூர் திவான் பகதூர் அ.மு.மு. முருகப்பசெட்டியார் என்பாரும் வந்தனர். பிறகு தாங்கள் வழக்கு நடத்த ஆயத்தமாகவிருப்பதாக வாதி தரப்புக்கு ஆஜராகியிருந்த வக்கீல் கோபாலாச்சாரி கூறினார். இ.பி.கோ. (ருஉசு (526–வது) செக்ஷன்படி

வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வாய்தாத் தரவேண்டுமென எதிரிதரப்பு கஉ (12ந் தேதி) சாக்கோட்டை முகாமில் வாய்தாப் போட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நவம்பர் (6ந் தேதி) மாஜிஸ்திடேரட் ***கோவிந்தநாயர் தீர்ப்பு விபரம்:*** இவ்வழக்கின் எதிரியாகிய ராய. சொக்கலிங்கன் ஆசிரியர் என்ற முறையில் விடுதலை செய்யப்பெற்றாரென்றும் அச்சிட்டு வெளியிடுவோர் என்ற முறையில் "இவர்களால் யாதுபயன்?" என்ற கட்டுரை வெளிப்போந்தமைக்காக ஒரு ரூபாய் அபராதம் கட்டவேண்டும் என்றும் அல்லது ஒருநாள் காவல் தண்டனை என்றும் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் ராய. சொவின் தரப்பு சாட்சிகள் அழகப்ப செட்டியார், முருந்த ராஜய்யங்கார், பி.எஸ். குமாரசாமி ராஜா, கோபால நாயக்கர், கரு.முத்து. சிவலிங்கம் ஆகியோரும்...

ராவ்பகதூர் ஆவி.பழ. சிதம்பரம் செட்டியார் தரப்பு சாட்சிகள் கோயில் பிள்ளை, சுந்தரமய்யர், மாணிக்கவாசகம் பிள்ளை, தி.மெ.செ.ச. சிதம்பரம் செட்டியார் ராஜாமணி ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

ராய. சொவை விடுதலை செய்த நீதிபதியின் தீர்ப்புக்கும், ராய.சொ. அவர்களைப் பாராட்டியும் ஊழியன், நவசக்தி, லோகோபகாரி, சுகோதயம், தமிழ்நாடு, தமிழ்நேசன், ரங்கூனிலிருந்து வெளியாகும் தேசோபகாரி போன்ற இதழ்கள் பாராட்டி எழுதியிருந்தன.

நேரத்திற்கு நேசமான மாணிக்கம்

-வி.என். சிதம்பரம்



சென்ற ஏப்ரல் மாத இதழில் எம்.சிஎன். மாணிக்கத்தின் பேட்டியை வெளியிட்டிருந்தோம். "புன்னகை மன்னன்" என்று தலைப்பிட்டு அவரின் நிறைகளையும், குறைகளையும் என் மனதில் பட்டதை எழுதியிருந்தேன். அதில் அவர் நேரந்தவறாமையைக் கடைப்பிடிக்க மாட்டார் என்று குறைபட்டிருந்தேன். ஒவ்வொரு இதழிலும் ஒருவரின் பேட்டி வெளியான சில நாளிலேயே நேரிலோ அல்லது தொலைபேசியிலோ என்னிடம் பேட்டி கொடுத்தவர்கள் நன்றி தெரிவிப்பார்கள். பேட்டி நன்றாக வந்திருக்கிறது என்று வாழ்த்துவார்கள். ஆனால் எம்.சிஎன். மாணிக்கம் எந்தவிதத் தொடர்பும் கொள்ளவில்லை.... முன்பு அடிக்கடி தொலைபேசியில் பேசுபவர் ஏன் பேட்டி வெளியான நாள் முதல் இன்று வரை பேசவில்லை...? என்று நான் நினைத்துக் கொண்டிருந்த போது எங்கள் வீட்டுத் தொலைபேசி சிணுங்கியது.

'ரிஸீவரை' எடுத்து நான் சிதம்பரம் பேசுகிறேன் என்றதும்... மறுமுனையில் அய்யா! வணக்கம்... நான் மாணிக்கம் பேசுகிறேன் என்றார். இது நாள் வரை என்னைத் தொடர்பு கொள்ளாததற்குக் காரணத்தை அவரே சொன்னார்... நீங்கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதியதில் நான் நேரந்தவறாமையைக் கடைப்பிடிப்பதில்லை என்று எழுதியது எனக்குள் நானே பல கேள்விகளைக் கேட்டு அதை மாற்ற முயற்சிக்க வேண்டும் என முடிவெடுத்தேன். அதன்படி நான் நடக்கவேண்டும் என்ற கொள்கையை எனக்குள் லட்சியமாகக் கொண்டேன். கடந்த வாரத்திலிருந்து சொன்ன நேரத்திற்குச் சொன்ன இடத்திற்குச் சம்பந்தப்பட்ட நபரைச் சந்தித்து வருகிறேன்... நேரந் தவறாமையை நான் கடைப்பிடிக்கத் தொடங்கியபின் பலபேர் என்னைப் பாராட்டி வருகிறார்கள்.

என் குறையை நான் திருத்திக் கொண்ட பிறகுதான் தங்களிடம் பேச வேண்டும் என்ற முடிவோடு இருந்தேன்.... இப்பொழுது நேரந்தவறாமையை மிகக்கவனமாகக் கடைப்பிடித்து வருகிறேன். எல்லோரிடமிருந்தும் பாராட்டுக்கள் வருவதைத் தொடர்ந்து இப்பொழுது தங்களுக்கு நன்றி தெரிவிக்கக்

கடமைப்பட்டிருக்கிறேன்! என்றார்.

நான் ஒரு சிறு குறையைச் சுட்டிக்காட்டினேன். அதைத் திருத்திக் கொண்ட பிறகு தான் என்னிடம் பேச வேண்டும் தன்னைத் திருத்திக் கொண்டார் என்பதற்குப் பாராட்டியவர்களையே சாட்சிக்கு வைத்துக்கொண்டு எனக்கு நன்றி கூறியதை எண்ணி மகிழ்ந்தேன். நாம் சொல்லுகின்ற கருத்துக்களின் படி ஒரு சிலர் தங்களைத் திருத்திக் கொண்டு நடக்கும்போது நாம் சொன்ன கருத்து அவரின் வாழ்வில் அர்த்தப்பட்டிருக்கிறது என்ற திருப்தி தான் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் எனக்குக் கிடைத்த வெற்றி...! இதை எழுதும்போது ஒரு சிறிய கதை ஒன்று நினைவுக்கு வருகிறது...

ஒருமுறை ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம், ஒரு பெண்மணி தன் ஏழு வயதுப் பையனோடு ஆசிபெற வந்திருக்கிறார், பரமஹம்ஸர் "என்ன வேண்டும் அம்மா ?" என்று கேட்கவும், அந்தப் பெண்மணி, "சுவாமி! என் பையன் அடிக்கடி சர்க்கரையைத் தின்று வருகிறான், நான் சொன்னால் கேட்கமாட்டேன் என்கிறான், ஆகவே சர்க்கரையைச் சாப்பிடாதே! என்று தாங்கள் சொன்னால் நிச்சயமாகக் கேட்பான்!" என்றாள் அப்பெண்மணி. "சரி... சென்று ஏழுநாள் கழித்து அழைத்து வாருங்கள்'' என்றார் பரமஹம்ஸர். ஏழுநாள் கழித்து மீண்டும் மகனோடு பரமஹம்ஸரைப் பார்க்க வந்தாள் அந்தப் பெண்மணி. உடனே பரமஹம்ஸர், "தம்பி இனிமேல் சர்க்கரையை சாப்பிடாதே! பிற்காலத்தில் அது உன் உடல் நலத்திற்குக் கேடுதரும்! விட்டுவிடு!" என்றார்.

பையனும் பரமஹம்ஸரின் அந்த அருள்வாக்குக் கேட்டு, "சரி சுவாமி! இனிமேல் சர்க்கரையைச் சாப்பிட மாட்டேன்!" என்றான்.

உடனே அந்தத்தாய், "சுவாமி! இதைப் போன வாரமே அவனிடம் சொல்லியிருக்கலாமே! ஏன் இன்றைக்கு வரச்சொன்னீர்கள்!" என்றாள். அதற்கு... "பரமஹம்ஸர், இல்லையம்மா...! எனக்கும் சர்க்கரை சாப்பிடும் பழக்கமிருக்கிறது. நான் அப்பழக்கத்தை விட்ட பிறகுதானே அடுத்தவருக்கு அறிவுரை கூற முடியும்...!" இந்த ஏழு நாளில் நான் சர்க்கரை சாப்பிடும் பழக்கத்தை மறந்து விட்டேன்! அதனால்தான் சிறுவனை சர்க்கரையைச் சாப்பிடவேண்டாம் என்று இன்று கூறினேன்...! என் மீது உள்ள குறையை நிவர்த்தி செய்து கொண்டால்தானே... நான் அடுத்தவருக்கு உபதேசம் செய்ய முடியும்! என்றாராம்.... அதைப் போல தன்குறையை நிவர்த்தி செய்து கொண்டு அந்தக் குறையைக் கண்டு சொன்னவருக்கு நன்றி கூறிய எம்.சிஎன். மாணிக்கம் இனித் தொடர்ந்து "நேரத்திற்கு நேசமான வராகத் திகழ்வார்...'' என்று வாழ்த்துகிறேன். கடிகாரத்தைப் பார்க்காமல் இவர் நடந்தார்... இனி, கடிகாரம் மாணிக்கத்தைப் பார்த்துச் சுழலட்டும்...

கோவிலூரில் தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார்களும் கூடிய எழுச்சிமிகு மாநாடு...!

சித்ரபானு ஆண்டு சித்திரைத் திங்கள் 20ஆம் தேதி முதல் 22ஆம் தேதி (3–5–02 முதல் 5–5–02) வரை மூன்று நாள் நடைபெற்ற எழுச்சிமிகு மாநாட்டினைக் காணக் கண்கோடி வேண்டும்...

இது மாநாட்டு விழாவிற்கு வந்தவர்கள் வராதவர்களிடம் சொல்லிச் சொல்லி மகிழும் அளவிற்கு மாநாடு சிறந்தோங்கியது.

முதல் நாள் மாநாடு

முதல் நாள் நிகழ்ச்சி மாலை 6–00 மணிக்குத் துவங்க வேண்டும் என்பது ஏற்பாடு... அன்று காலை 10–00 மணியிலிருந்தே நகரத்தார் பெருமக்கள் திருவிழாவிற்குச் செல்லும் மகிழ்ச்சியோடு ஆச்சிகளும், குழந்தைகளும் ஆர்வத்தோடுக் கூடத் தொடங்கினர்.

பிரமாண்டமான பந்தல்

மண்டபத்தில் தான் மாநாட்டு அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது என்றாலும் அரங்கத்திற்கு வெளியே சுமார் 10 ஆயிரம் பேர் அமரும் வகையில் மாபெரும் அலங்காரப் பந்தலை எழிலோடு நிர்மாணித்திருந்தனர். பந்தலில் உள்ள நாற்காலிகளில் அமர்ந்தபடியே நிகழ்ச்சிகளைக் காணும் வண்ணம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அதிக அளவில் அலங்காரப் பந்தலில் தயாராக இருந்தன...

குடும்பம் குடும்பமாக

பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும், இரண்டு சக்கர வாகனங்களிலும், அலை அலையாய்... அணி அணியாய்... குடும்பம் குடும்பமாய் கோவிலூரில் திரளத் தொடங்கியது நகரத்தார் வெள்ளம். அனைத்துச் சாலைகளும் கோவிலூர் நோக்கியேப் பயணப்பட்டன.

விழா நாயகர்

அன்று மாலை சுமார் 5–30 மணியளவில் விழாக் குழுவினருடன் துறவுக் கூடத்திலிருந்து காவியுடை தரித்த நகரத்தாரின் மண்டேலா சீர்வளர் சீர் நாச்சியப்ப சுவாமிகள் அழைத்து வரப்பட்டார். அருள்மிகு நெல்லை அம்மன் உடனாகிய கொற்றவாளீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடத்தப் பெற்றது. இறையருளோடு மாநாட்டு அரங்கத்திற்கு வருகை தந்தனர். கூட்டத்தினரின் பலத்த கரவொலிகளின் நடுவே விழாநாயகர் மேடையில் ஆசி வழங்கியவாறு அமர்ந்தார். முக்கியப் பிரமுகர்களும் மேடையில் இருக்கையில் அமர்ந்தனர்.

இறைவாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சித் தொடங்கியது...

ஆன்மிக குருவின் அருளுரை

கோவிலூர் ஆதீனத்தின் 12வது குரு மாக சன்னிதானம் சீர்வளர் சீர் நாச்சியப்ப அடிகள் ஆற்றிய அருளுரையில், ''தென்னாட்டில் கோவிலூர் மடம்'' ஒன்றுதான் வேதத்தைத் தமிழில் கற்றுத் தருகிறது. 'வேதாந்தம்' எனப்படுவது ஒரு மதம் என நினைக்கிறார்கள்... தமிழகத்தில் ஓதுவார்கள் பற்றாக்குறை உள்ளது. காரணம் சம்பளம் குறைவாக இருப்பதாலும் அப்பாவின் தொழிலுக்கு மகன் வர வேண்டாம் என நினைத்து இளைஞர்கள் கம்ப்யூட்டர் கல்விக்குச் சென்று விடுகிறார்கள். கோவிலூர் ஆதீனத்தில் பயின்ற 100 ஓதுவார்கள் தற்போது 2000, 3000 ரூபாய் எனச் சம்பாதிக்கின்றனர். 181 பேருக்கு நாதஸ்வரம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. சிற்பக் கலைப்பயிற்சியும் பயிற்றுவிக்கப்படுகிறத.

நிகர் நிலைப் பல்கலைக்கழகம் ஒன்றைத் துவங்கி சுமார் 10 கலைகளில் பாடமும், பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. நகரத்தார் சமுதாய வளர்ச்சிக்காக "நகரத்தார் நல்வாழ்வு அறநிலை" (Nagarathar Welfare Trust) துவங்கப் படவுள்ளது. இந்த அறநிலைக்கு ரூபாய் 7கோடி நிதி சேர்த்திடும் திட்டமும் உள்ளது! எனக் கூறிய சுவாமிகள் இந்த அறநிலைக்குத் தனது சார்பில் ரூபாய் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது என்று கூறியதும் கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரம் அடங்க வெகுநேரமாயிற்று. மேலும் சுவாமிகள் தனது அருளுரையில்... நகரத்தார் சமுதாய மக்களில் ஒருபக்கம் வசதிபடைத்தவர்கள், மற்றொரு பக்கம் வசதியற்றவர்கள் என்ற நிலையில் தான் வாழ்ந்து வருகிறார்கள். அந்த வசதியில்லாதவர்களைக் கவனிக்க வேண்டும் என்பதே நோக்கம். பணக்காரன்... ஏழை என்ற பாகுபாட்டை மாற்ற வேண்டும் என்பதே என்னுடைய முக்கியத் திட்டம். நகரத்தாரில் உள்ள சுமார் 35000 புள்ளிகளில் புள்ளி ஒருவருக்கு குறைந்தபட்சம் ரூ 1000/– வீதம் அறநிலைக்கு வழங்க வேண்டும். வசதியுள்ளவர்கள் அதிகமாகத் தரலாம். கட்டாயம் கிடையாது. ஏழுகோடி ரூபாய் சேர்ந்தால் இளைஞர்களின் உயர்கல்விக்கு நிச்சயமாக உதவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இப்போது வசதியற்ற 100 முதியோர்களுக்கு மாதந்தோறும் கோவிலூர் ஆதீனம் உதவி வருகிறது.

நம்மை வளர்த்து ஆளாக்கியப் பெற்றோர்களை முதியோர் இல்லங்களில் தள்ளிவிடக்கூடாது... அவர்களுக்கு உதவுவது நமது தலையாய கடமை என்ற எண்ணம் வளர வேண்டும். உண்மையிலேயே பெற்றோர்களை வைத்துக் காப்பாற்ற முடியாது கஷ்டப்படும் பிள்ளைகள் முதியோர் இல்லங்களுக்கு

அனுப்பலாம். அப்படிப்பட்ட முதியோர்களுக்குத் தான் உதவிடும் திட்டம் உள்ளது. இந்தத் திட்டத்திற்கு வெளி நாடுகளில் உள்ள நம்மவர்கள் எல்லாம் அள்ளித்தருவதாக உறுதி கூறியிருக்கிறார்கள்.

நம் சமுதாயத்தில் மூன்றுநாள் நடைபெற்ற திருமணங்கள் இப்போது ஒருநாள் மட்டும் நடைபெறுவதாக மாறியிருக்கிறது எனும் இந்த மாற்றம் வரவேற்கக் கூடியதே... என்னுடைய சம்பாத்தியத்தில் நிறைய வட்டி வருகிறது. அந்த வட்டியை நல்ல காரியங்களுக்கும் நகரத்தார் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த வட்டியைச் செலவு செய்ய முடிவெடுத்திருக்கிறேன்.

கோவிலூர் ஆதீனம் என்றும் உதவிடும் ஒரு ஆலயமாக சாசுவதமாக இருக்கும் என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறிக் கொள்கிறேன்! என்று சுவாமிகள் கூறியதும்... சமூகச்சிந்தனையும், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாட்டை மாற்ற வேண்டும். இளைஞர்களின் கல்விக்கும், முதியோர்களின் அந்த கடைசி வாழ்க்கைக்கும் உதவவேண்டும் என்ற சிந்தனை கொண்டவராக மடாலயத்திலிருந்து மறுமலர்ச்சி கொண்ட ஒரு மகா புருஷர் நகரத்தாருக்குக் கிடைத்திருக்கிறார் என்பதை கூட்டத்தினரின் முகத்தில் தோன்றிய நம்பிக்கை ஒளியில் காண முடிந்தது.

மேலும் அருளுரையாற்றிய அருளாளர், "சமூகப் பணிகளோடு நின்றுவிடாமல் இலக்கியப் பணியையும் ஆற்றப் போகிறேன். சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், மணிமேகலை, சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு இன்னும் பிற இலக்கியங்களையும் சாதாரண மக்களும் படிக்கக்கூடிய அளவிற்கு எளிய தமிழாக வடித்து, நூலாக அச்சிட்டு மக்கள் பதிப்பாக வெளியிடப்படும் என்றபோது... மெல்லத் தமிழ் இனி வாழும்." என்று நம்மவர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயமே பெருமைப் படக்கூடிய அளவிற்கு அனைவரின் கண்களுக்கும் மடாலயத்திலிருந்து ஒரு சீர்திருத்தத் தூதுவராக, தமிழன்னையின் மைந்தராகத் தரிசனம் தந்தார்.

சங்க இலக்கியங்களை மக்கள் பதிப்பாக வெளிவருவதற்கு முனைவர் தமிழண்ணல் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படவுள்ளது என பலத்த கரவொலிகளில் அதிர்ந்த அரங்கத்தில் இவ்வாறு அருளுரை நிகழ்த்தினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

காலை 9–30 மணிக்கு ஆன்மீக அரங்கம் தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையேற்றிருந்தார். அன்று தான் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாள் ஆனால்... அன்று முழுவதும் அடைமழை பொழியத் தொடங்கியது.

வெயிலின் வெப்பத்திற்குப் பதிலாக... குற்றாலத்தில் நடைபெறும் சாரல் விழாவைப் போன்று இரண்டாம் நாள் நிகழ்ச்சி துவங்கியது. ஆன்மீக அரங்கத் தலைமையுரையாற்றிய வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் "நகரத்தார் மாநாட்டை அந்த வருண பகவானே நேரில் வந்து வாழ்த்துவதாக நினைக்கிறேன்." கொளுத்தும் அக்னி வெயிலுக்குப் பதிலாகக் குளிரில் நனைந்த படியே நடைபெறும் இவ்விழாவிற்கு வருணன் வந்ததால் தான் கோவிலூர் மாநகரமே குளிர் நகரமாக மாறிவிட்டது.

கோவிலூர் ஆதினம் அவர்கள் சன்னிதானத்தல் எல்லோரும் சமம்தான். தலையாய மக்களைத் தந்த தலையாய சமூகம் எனும் பொருளில் பேராசிரியப் பெருமக்கள் உரையாற்ற விருக்கிறார்கள். படித்தவர்கள் நிறைந்த இந்தச் சபையில் படிக்காதவனாகிய நான் பேசுகிறேன் என்றால் படித்தவனும், பாமரனும் சுவாமிகள் சன்னிதானத்தில் ஒன்று என்பதற்கு நானே உதாரணம்.

நான் படிக்கவில்லையே தவிர படிப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அனுபவங்களால் பட்டறிவு... பட்டப்படிப்பு அறிவுக்கு சமம் என்பார்கள்... நான் நிறையவே அனுபவப் பட்டவன் தான். ஆகவே, நான் தலைப்புக்குள் போகவில்லை.

தலையாய சமூகம் என்பதற்கு உதாரணமாக ஒருசில நிகழ்வுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இக்காலத்தில் வருமானவரி, சொத்துவரி என்று அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறதென்றால் இந்த வழக்கத்தை ஆதியிலே கண்டவர்கள் நகரத்தார்கள் தான். தான் ஈட்டிய பொருளைக் காத்து சேமித்து, வகுத்து, பகுத்துக் கொடுத்தவர்கள். ஒரு குறிப்பிட்டத் தொகையை தர்ம வட்டிக்குக் கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் குறிப்பிட்ட சதவீதத்தை தர்மகாரியங்களுக்கு, ஆலயப் பணிக்கு என ஆக்கபூர்வமாகப் பகுத்து வழங்கியவர்கள் தான் நகரத்தார்கள். வட்டி என்றதும் அநியாய வட்டி, ரன் வட்டி, மீட்டர் வட்டி என்று கூறப்படும் வட்டிகளல்ல... நியாயமான வட்டி, அதைத் தான் தர்மவட்டி என்றேன். இந்தத் தர்ம வட்டி சதவீதம் தான் அரசுக்கு இன்றைய வரிவிதிப்புக்குக் காரணமான மூலம்.

கோவிலூர் சுவாமிகள் அமெரிக்காவில் புகைப்படக் கலையிலும், அச்சகத் துறையிலும் கொடிகட்டிப் பறந்தவர்கள். இந்தத் துறைகளில் உலகத்தில் மிகச் சிறந்தவர்கள் வரிசையில் நமது சுவாமிகளும் ஒருவர். அப்படித் தன் சுய உழைப்பால் ஈட்டிய செல்வத்தையெல்லாம் கோவிலூர் மடத்துக்குக் கொண்டு வந்தார். கொண்டு வந்த செல்வத்தை நலிந்தோருக்குப் பயன்படவேண்டும் என்று விரும்புகிறார்.

பட்டினத்தடிகளும் தன் செல்வங்களையெல்லாம் தனது கணக்காளரிடம் கொடுத்து/ "ஏழை

எளியோருக்குக் கொடுத்துவிடு...!" என்று கூறி துறவறம் மேற்கொண்டார். ஆனால் நமது நாச்சியப்ப அடிகளோ... தான் ஈட்டிய செல்வங்களைத் தானே முன்னின்று ஏழை, எளியோர் மற்றும் அறப்பணிகளுக்கு வாரி வழங்குகிறார் என்றால் வாழும் பட்டினத்தடிகளாக நான் சுவாமிகளைப் பார்க்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அடுத்து தலையாய மக்களைத் தந்த தலையாய சமூகம் என்ற பொருளில் கண்ணகியைப் பற்றி நா. மீனவன் அவர்களும், காரைக்கால் அம்மையாரைப் பற்றி இராம. சௌந்திரவல்லி அவர்களும், பட்டினத்தாரைப் பற்றி முனைவர் அர. சிங்கார வடிவேலன் அவர்களும், பாடுவார் முத்தப்பர் பற்றி பழ. முத்தப்பன் அவர்களும் சிறப்புரை யாற்றினர். கோவிலைச் சார்ந்த குடிகள் என்ற பொருளில் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களும் உரையாற்றிய பின்னர், மதிய உணவுக்குப் பிறகு 2–30 மணிக்கு குழு விவாத அரங்கம் நடைபெற்றது. மாநாட்டில் பங்கேற்றோர் தங்களுக்குள் தனித்தனிக் குழுவாக அமைத்துக்கொண்டு எந்த வகையில் உதவிடலாம் என்று கீழ்க்கண்ட பொருள்களில் விவாதித்தனர்.

1. கல்வி மேம்பாட்டு உதவிகள்
2. வேலை வாய்ப்புகள்
3. மணமுறிவைத் தவிர்த்தல்
4. முதியோருக்கு உதவுதல்
5. நலிவடைந்த நகர விடுதிகளின் சீரமைப்பு
6. மகளிர் மேம்பாடு
7. திருமண நடைமுறைகள்

ஆகிய பொருள்களில் விவாதம் நடத்தி ஆக்கப் பூர்வமான அறிக்கைகளைத் தயார் செய்தனர்.

மாலை 6–00 அளவில் "மாறி வரும் காலத்தில் நகரத்தார் மாறியது, மாறாதது, மாறக்கூடாதது" என்ற பொருளில் சமூக அரங்கம் நடைபெற்றது.

முனைவர் சுப. அண்ணாமலை தலைமையில் முனைவர் தமிழண்ணல், விசாலாட்சி சுப்பிரமணியன், ச. மெய்யப்பன், பழ. கருப்பையா ஆகியோர் பங்கேற்றுப் பேசினர். இரவு 8–00 மணிக்கு "நகரத்தார் இதழ்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. தனவணிகன், நகரத்தார் மலர், நகரத்தார் இதழ், ஆச்சி வந்தாச்சு ஆகிய இதழ்களின் ஆசிரியர்களுக்குப் பொன்னாடை அணிவித்து சுவாமிகள் ஆசி கூறினார்கள். இதழ்களின் ஆசிரியர்களைப் பாராட்டி கவிஞர் செல்வகணபதி உரை நிகழ்த்தினார். அன்றைய நிகழ்ச்சி நிறைவுற்று இரவு உணவுக்கு அனைவரும் சென்றனர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

நீதியரசர் டாக்டர். அரு. லெட்சுமணன் அவர்கள் தலைமையில் தொடங்கியது.

குழு விவாதம் நடத்தி ஆக்கப் பூர்வமான அறிக்கைகளைத் தயாரித்த குழுவின் தலைவர்கள் அறிக்கையினைச் சமர்ப்பித்து உரையாற்றினர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை பற்றி அறிஞர்களின் கருத்துரையும் நடைபெற்றது. தீர்மானங்களை நிறைவேற்றி நகரத்தார் நல்வாழ்வு அறநிலை துவங்குதலும் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றது.

நாச்சியப்ப சுவாமிகள் நிறைவுரையாற்றினார். செயலாளர் நா. நாராயணன் நன்றியுரையாற்றினார். கூடிக்கலைந்தோம் என்றில்லாமல் நம் நிறைகுறைகளைக் கூட்டிக் கழித்ததாகவும், கூடிக்களித்தோம் என்ற உணர்வோடு மாநாடு நிறைவுற்றது. இறை வணக்கம் பாடி முடிந்ததும் தேசிய கீதம் முழங்கியது. இறைப்பற்றும், தேசப்பற்றும் மிக்கவர்கள் நகரத்தார்கள் என்பதை உலகுக்கு உரக்கச் சொல்வதாக அமைந்தது. மூன்று நாள் மாநாட்டில் சுமார் 5000 பேர் கலந்து கொண்டனர். இனிவரும் ஆண்டுதோறும் 96 ஊர் நகரத்தார் மாநாடு நடத்த வேண்டும் என்ற உறுதியோடு மாநாட்டுத் திருவிழா மகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும், எதிர்காலத்தில் வரும் சந்ததியினருக்கும் உதவ வேண்டும் என்ற சுவாமிகளின் தொலை நோக்குத் திட்டமும் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு ஒருவருக்கொருவர் விடை பெற்றுக் கொண்டும், சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டும் தங்கள் இல்லங்களுக்குப் புறப்பட்டனர்.

— தொகுப்பு திருநாகேஷ்

நகரத்தார் ரத்தினங்கள்...

நகரத்தார் ஒவ்வொருவரும் ஒரு ரத்தினம்தான் என்றாலும் தாங்கள் ஏற்றுக்கொண்ட துறைகளில் சாதனை நிகழ்த்தியதற்காகவும், நிகழ்த்திக் கொண்டிருப்பதற்காகவும் நகரத்தாரில் நால்வருக்கு நகரத்தார் ரத்தினங்கள் என்ற பட்டமும் தங்கப்பதக்கமும் பெற்று பாராட்டுப் பெற்றனர். நீதித்துறைச் சாதனை நாயகர் ஆந்திர மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் டாக்டர். அரு. லெட்சுமணன் அவர்களும், வாழும் தமிழாம் முனைவர் தமிழண்ணல் அவர்களும், பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் முத்துக்கருப்பன் அவர்களும், நகரத்தாரில் இரண்டாவது ஐ.ஏ.எஸ். என்ற பெருமையுடன் கர்நாடக மாநிலம் பெங்களூரில் இந்திய விண்வெளித்துறைக் கூடுதல் செயலாளராகப் பணியாற்றி வருபவருமான சொ.சொ.மீனாட்சி சுந்தரம் ஐ.ஏ.எஸ் அவர்களுமாகிய நால்வரும் "அருந்தவச் செல்வர்கள்" என்று சுவாமிகள் பாராட்டுத் தெரிவித்தார்கள். ரத்தினங்கள் நால்வரும் ஏற்புரை நிகழ்த்தினர். முதல் நாள் மாநாடு சுவையான இரவு பஃபே முறை உணவுடன் நிறைவடைந்தது....!

கோவிலூர் ஆண்டவர் சொல்றார்...!

-வி.என். சிதம்பரம்

கோவிலூர் மாநாட்டுக்குழுச் செயலாளராக இருந்து அரும்பணியாற்றி வெற்றி மாநாடாக நடத்திக் காட்டியதில் பெரும் பங்கு ஆடிட்டர் நாராயணன் அவர்களைத் தான் சாரும்.

அவர் ஒரு சிறந்த அறிவாளி... கெட்டிக்காரர்... அய்யர் அன் கோ போன்ற பல்வேறு நிர்வாகத்தில் இருந்து கொண்டு கோவிலூர் சுவாமிகளின் ஆணைப்படி அவரின் எண்ணத்துக்கேற்றவாறு காரிய மாற்றுவதில் இவர் ஒரு செயல் மறவர் என்பதை நிரூபித்து விட்டார். அவர் ஒரு தொழிலில் இருந்தாலும், நமது கோவிலூர் ஆண்டவர் நாச்சியப்ப சுவாமிகள் என்ன செய்யவேண்டும் என எண்ணுகிறாரோ... அந்த எண்ணத்திற்குச் செயல் வடிவம் தருவதிலும் முழு ஈடுபாட்டோடு அதை நிறைவேற்றுவதிலும், பல்வேறு 'டென்ஷன்'கள் இவரைச் சூழ்ந்தாலும் அமைதியாகவும்... அழுத்தமாகவும் காரியம்



மாற்றுவதில் சகலகலாவல்லவர் தான் ஆடிட்டர் நாராயணன் என்பதைக் கண்கூடாகக் கண்டவன்.



கோவிலூர் முதலாம் ஆண்டவர் முத்துராமலிங்க ஞானதேசிக சுவாமிகளின் மகன்வழித் தோன்றலில் ஆறாவது தலைமுறைப் பேரனாகவும் கோவிலூர் மடாலயத்தின் பன்னிரண்டாவது ஆதீனகர்த்தராகப் பொறுப்பெற்றுக் கொண்டவர் தான் நமது நாச்சியப்ப சுவாமிகள்.

நாச்சியப்ப சுவாமிகள் எந்தநேரமும் முதலாமாண்டவரான முத்துராமலிங்க ஞானதேசிக சுவாமிகளை நினைத்து வணங்கியபடி தான் ஒவ்வொரு செயலையும் நடத்துகிறார்.

அமெரிக்காவில் போட்டோகிராபிக் தொழிலையும், பிரிண்ட் சம்பந்தமான தொழிலையும், சிறந்த முறையில் ஆற்றி உலகத்தின் சிறந்த கலைஞராக தொழிலாற்றிப் பெரும் பணம் ஈட்டியவர் தான் நமது சுவாமிகள்.

நாராயணன் முடிக்கிறார்...!

பதினோராவது ஆதீனகர்த்தரான காசிவிஸ்நாத ஞானதேசிக சுவாமிகள் தனக்குப் பிறகு நாச்சியப்ப சுவாமிகள் தான் பட்டமேற்க வேண்டும் என்று விழைந்த பொழுது நாச்சியப்பரிடம் இரண்டு கேள்விகள் மனதில் எழுந்தன... போட்டோகிராபிக் மற்றும் பிரிண்ட் தொழிலை தொடர்ந்து ஆற்றுவதா? இல்லை கோவிலூர் ஆதீனகர்த்தராகப் பொறுப்பேற்றுக் கொள்வதா? என சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் இவரின் கனவில் முதலாமாண்டவர் முத்துராமலிங்க சுவாமிகள் தோன்றி ஒரு காவி வேட்டியையும், காவிதுண்டையும் வழங்கினாராம்.

நாச்சியப்பர் அன்றே முடிவெடுத்தார் ஆண்டவரே அருள்பாலித்து விட்டதாக எண்ணி கோவிலூர் ஆதீனகர்த்தராகப் பொறுப்பேற்றார். தான் ஈட்டிய பெரும் செல்வத்தையெல்லாம் கோவிலூர் ஆதீனத்திற்குக் கொண்டு வந்தார்.

நகரத்தார் சமூகம் மேம்பாடு அடைய வேண்டும் என்ற சிறந்த எண்ணம் அந்தக் காவிகட்டிய துறவியிடம் இருப்பதும் முத்துராம லிங்க சுவாமிகளின் அருள்தான் என்பதும் நிச்சயம். முத்துராமலிங்க சுவாமிகள் உயிரோடு சமாதியானார் என்பதால் அவரின் அருள் ஆசி அந்த மடமெங்கும் வியாபித்து இருக்கிறது என்பது உண்மை. அதனால் தான் சுவாமிகள் ஒவ்வொரு காரியமாற்றும் போதும் சுவாமிகளின் கனவில் ஆண்டவர் வந்து பேசுகிறார் என்பதும் நிஜம்தான்.

சுவாமிகளின் திட்டங்களான நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மருத்துவக் கல்லூரி போன்ற திட்டங்கள் எல்லாம் நிச்சயமாக வெற்றிபெறும் நடத்திக் காட்டுவேன் என்று சுவாமிகள் கூறியதெல்லாம் அவரின் ஆண்டவரின் ஆணைப்படி தான் என்பதை நான் அறிவேன்... உணர்வேன்...

சுவாமிகளின் கனவில் முதலாம் ஆண்டவர் ஆணையிடுகிறார். இந்த பன்னிரண்டாம் ஆண்டவர் திட்டங்களைச் சொல்கிறார் நாராயணன் முடிக்கிறார் என்பதே உண்மை.

இராமாயணக் காப்பியத்தில் ராமனின் வெற்றிக்கு ராமபக்தனான அனுமன் எப்படி விளங்கினானோ... சஞ்ஜீவி மலையைக் கொண்டு வரவேண்டும் என்று ராமன் நினைத்தவுடன் அடுத்த நொடியில் தனது விஸ்வரூபத்தால் அந்த மகத்துவ மலையைத் தகர்த்துக் கொண்டுவந்தவனல்லவா அனுமன்! அதைப் போலவே நாச்சியப்ப சுவாமிகள் என்ற ராமருக்குக் கிடைத்த அவரின் பக்தனான இந்த நாரயண அனுமன் என்றால் கூட மிகையில்லை...!

கோவிலூர் ஆண்டவர் சொல்றார்... இந்த நாராயணன் முடிக்கிறார் என்பதற்கு இந்த வெற்றி மாநாடே சாட்சி...!



தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் மாநாட்டில் கோவிலூர் தவத்திரு நாச்சியப்ப அடிகள் ஆசியுரை தருகிறார்...



கொற்றவாளீஸ்வரர் – திருநெல்லையம்மன் ஆலயத்தில்
வழிபாடு நடத்திவிட்டு சுவாமிகளை அழைத்து வந்த காட்சி...



நகரத்தார் ரத்தினங்கள்...



மாநாட்டில் சுவாமிகளுடன் ரகுபதி சுப்பிரமணியம், நமது ஆசிரியர்.



முனைவர் தமிழண்ணல் உரை தருகிறார்...



பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன் உரையாற்றுகிறார்...



பொற்கிழிக்கவிஞர் சொ.சொ.மீ. சுந்தரம் கவியுரை தருகிறார்...

கோவிலூாில் நடைபெற்ற
96 ஊர் நகரத்தார் மாநாட்டின் நிறைவு நாளில் நீதியரசர் ஏஆர், லெட்சுமணன் அவர்கள் ஆற்றிய உரை!



அருள்மிகு அடிகளார் அவர்களே! டாக்டர். சண்முகம் செட்டியார் அவர்களே... நீதியரசர் பழநியப்பன் அவர்களே, மேடையில் அமர்ந்திருக்கும் நண்பர்களே! நகரத்தார் பெருமக்களே! பெரியோர்களே! கடந்த மூன்று நாட்களாக இந்த மாநாட்டுத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கல்வி மேம்பாடு, வேலைவாய்ப்பு, மண முறிவைத் தவிர்த்தல், முதியோருக்கு உதவுதல், மகளிர் மேம்பாடு, திருமண நடைமுறைகள் போன்ற தலைப்புகளில் நம் சமூகத்தைச் சார்ந்த பெரியோர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களில் நமது சமுதாயம் மேம்பாடு அடைவதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களையும், மாற வேண்டிய பழக்க வழக்கங்களையும் தெரிவித்து இருக்கிறார்கள்.

நம் சுவாமிகளின் கருத்துப்படி இம்மாநாட்டின் மிக முக்கியமான நோக்கங்கள் இரண்டு. முதலாவதாக கல்விக்காக உதவித்தொகை வழங்குதல். இரண்டாவதாக நலிந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு கல்வி உதவியும், அவர்களுக்கு திருமண உதவியும் வழங்கிட வேண்டும் என்ற நோக்கங்களும் வரவேற்கக் கூடியது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பாக நம்மவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று தொழில் செய்து வந்தார்கள். நல்ல வளர்ச்சி பெற்ற நிலையில் அப்போது இருந்தார்கள். இன்றைக்கு உள்ளது போல் விமான ஊர்தி வசதிகள் எல்லாம் இல்லாத காலங்களிலே பாய்மரக் கப்பலில் சென்று தொழில் செய்து, வாணிபத்தைப் பெருக்கி பொருளீட்டி நமது நாட்டிற்குக் கொண்டு வந்து பெரிய... பெரிய... மாளிகைகள் எல்லாம் கட்டியதோடு கோவில்களுக்கும், பொதுவான நல்ல

காரியங்களுக்கும் அறப்பணிகள் செய்தார்கள்.

காலப்போக்கில் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு பர்மா போன்ற நாடுகளில் தொழில் செய்ய முடியாமல் அந்நாட்டில் தங்கள் உடமைகளை, உழைப்புகளை விட்டுவிட்டு கால்நடையாகவே இந்தியாவிற்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் காலக்கட்டத்தில்தான் நகரத்தார் சமூகத்தில் நலிவுற்ற நிலை ஏற்பட்டது.

ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதிய "Discovery of India" எனும் நூலில் நகரத்தார்களைப் பற்றி மூன்று பக்கங்களில் சிறப்பாக குறிப்பிட்டிருக்கிறார். கொடுக்கல்–வாங்கல் என்கிற இந்த வங்கி முறையை அதாவது "Banking Concept"–ஐ மற்ற நாடுகளுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் நகரத்தார்கள்தான் என்று எழுதியிருக்கிறார். இது நமது சமூகத்திற்கு கிடைத்த பெருமை என்றுதான் கூறவேண்டும்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது" என்ற ஒரு பழமொழியிருக்கிறது. எந்த நகரத்தார் ஊருக்குச் சென்று பார்த்தாலும் "நகரக் கோயில்" என்று பொதுவான ஒரு கோயில் நிச்சயமாக இருக்கும். இப்படி ஆலயப்பணிகளிலும், அறப்பணிகளிலும் ஈடுபட்டு வந்த நகரத்தார் பெருமக்கள் பிற்காலத்தில் கல்விப்பணி செய்ய ஆரம்பித்தார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கருமுத்து தியாகராஜ செட்டியார் குடும்பத்தினரின் பள்ளிகளும், கல்லூரிகளும், டாக்டர். அழகப்பா செட்டியார் அவர்கள் கொடுத்த நன்கொடையாலும் அவருடைய பெயராலும் விளங்கி வருகின்ற பல பள்ளிகள், கல்லூரிகள் போன்ற கல்வி நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு அதிகமாக உள்ளன. இவற்றில் எல்லாம் நகரத்தார்கள் பெரும் பொருளுதவி செய்து வருகிறார்கள். இன்றைய காலத்தில் கல்விக்காக அதிகம் செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையில் இந்த சமுதாயத்தில் மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்கள் உட்பட எல்லோரும் கட்டாயம் படித்தாக வேண்டும் என்ற உணர்வு இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. படித்தால் தான் முன்னேற முடியும் என்ற எண்ணமும் வளர்ந்து வருகிறது.

அந்தக் காலத்தில் ஒரு பதிமூன்று, பதினான்கு வயதில் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள தங்கள் தொழில் நிறுவனங்களில் கை பழகுவதற்காக அனுப்பி வைப்பார்கள்.



ஆனால் அந்த நிலை இன்று மாறிவிட்டது. படிப்பதற்காக வெளிநாடு செல்லவேண்டிய நிலை இன்று இந்தியாவில் இல்லை... இந்தியாவிலேயே படிப்பதற்கு எல்லா வசதிகளும் உள்ளன. வெளி நாட்டிலிருந்தெல்லாம் இந்தியாவிற்குப் படிப்பதற்காக வருகிறார்கள். கல்விக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று முன்வந்து இருக்கும் சுவாமிகளை நமது சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரும் பாராட்டவேண்டும். அதுமட்டுமல்ல, இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு அடிகளாரின் ஆசீர்வாதத்தையும் பெறவேண்டும் என்பது எனது பேரவா...



நம் இனப்பெண்களின் முன்னேற்றத்திற்கென ஒரு அற நிறுவனம் இன்று அமைக்கப்படுகிறது. நமது அடிகளார் அவர்கள் அதற்கென பல டிரஸ்டிகளையும் நியமனம் செய்திருக்கிறார்கள். இந்த இரண்டு அற நிறுவனங்கள் மட்டுமல்லாது "Employment Exchange" ஒன்றை கோவிலூரில் நிறுவிடவும் ஏற்பாடு செய்துவருகிறார்கள். இது இளைஞர், இளைஞிகள் முன்னேற்றத்திற்கு சுவாமிகள் செய்து வருகின்ற மிகப்பெரிய பணி என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

சட்டத்துறை, நீதித் துறையினைப் பற்றி நான் அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். நம்மவர்கள் எல்லாத்துறையிலும் இருந்து வருகிறார்கள். ஆனால் சட்டத்துறையில் மிகவும் குறைவானவர்களே இருக்கிறார்கள். இப்போது எழுபத்தைந்திலிருந்து, நூறு பேருக்குள்ளா னவர்கள் சட்டத் துறையில் இருக்கிறார்கள். நீதித்துறையில் திரு. பழனியப்ப செட்டியார் அவர்கள் தான் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் நகரத்தார் என்பதை பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். அதன்பிறகுதான் நானும், மற்றவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். மேலும்... மேலும்... சட்டம் படித்தால் நீதித்துறையிலே நம்மவர்கள் பணியாற்ற மிக அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன.

முக்கியமாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன் "தேசிய சட்டப் பல்கலைக் கழகம்" ஒன்று ராஜஸ்தான் மாநிலத்தில் நான் தலைமை

நீதிபதியாக இருந்தபோது துவக்கப் பெற்றது. இந்தியாவில் உள்ள எந்த மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களும் அங்கு படிக்கலாம். அங்கு சேர்ப்பதற்கு மதிப்பெண் விகிதச்சாரங்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்தப் பல்கலைக்கழகம் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜோத்பூரில் உள்ளது. அதனுடைய 'Founder Chancellor' (நிறுவன வேந்தர்) நான் என்பதையும் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

நம்மவர்கள் 'Vice Chancellor' (துணை வேந்தர்) ஆக இருந்திருக்கிறார்கள். எம்.ஏ.எம். அவர்கள் 'Pro-Chancellor' ஆக இருக்கின்றார்கள். ஆனால் 'Chancellor' ஆக யாரும் இருந்ததில்லை. இந்தியச் சட்டப்படி அந்த அந்த மாநிலத்தின் ஆளுநர் பொறுப்பில் உள்ளவர்கள்தான் பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருப்பார்கள். ராஜஸ்தான் மாநில அரசு அந்தப் பல்கலைக்கழகத்திற்கு வேந்தராக நீங்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று என்னிடம் கேட்டபோது... அரசியல் தலையீடுகள் எதுவும் இருக்கக்கூடாது என்று உறுதி தந்தால் நான் பொறுப்பேற்கிறேன் என்றேன்... அரசும் என்னுடைய ஆலோசனையை ஏற்று என்னை 'Founder Chancllor' ஆக நியமித்திருக்கிறது.

நான்கு தேசியப் பல்கலைக் கழகங்கள் பெங்களூர், கொல்கத்தா, ஹைதராபாத், ராஜஸ்தான் போன்ற நகரங்களில் உள்ளன. ஆந்திர மாநில சட்டப்பல்கலைக்கழகத்திலும், ராஜஸ்தான் மாநில பல்கலைக்கழக முறைப்படி தலைமை நீதிபதிதான் 'Chancllor' ஆவார்.

சட்டத்துறையில் சேர விரும்புபவர்கள் ராஜஸ்தான் செல்வதானாலும், ஹைதராபாத் வருவதானாலும் அவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வதற்கு நான் தயாராகவே இருக்கிறேன் என்பதை இம்மாநாட்டில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய வாழ்க்கை முறைக்கு சட்டத்துறை மிகவும் அவசியம். சட்டம் படித்தால் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற உண்மையையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெளிநாடுகளில் படிக்க விரும்புபவர்களுக்கு உதவிடத் தயாராக உள்ளதாக சிங்கப்பூர் ரகுபதி சுப்பிரமணியம் போன்றவர்கள் முன்வந்திருப்பதற்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனையும் நம்மவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இன்றைக்கு உள்ள இளைஞர்களுக்கு நகரத்தார்கள் சார்ந்த கோவில்கள் எத்தனை, அவற்றில் உள்ள பிரிவுகள் எத்தனை

என்பது தெரியவில்லை... தமிழ் வருடங்கள் எத்தனை என்பதும் தெரியவில்லை... அவற்றையெல்லாம் அவரவர்களின் பெற்றோர்கள் அவசியம் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அமெரிக்காவில் உள்ள நம்மவர்களுக்கு, நமது பாரம்பரிய பண்பாடுகள் பற்றிச் சொல்வதற்கு, அவற்றை வளர்ப்பதற்கு நமது சுவாமிகள் ஏற்பாடு செய்துவருகிறார் என்பதும் பாராட்டப்படவேண்டிய ஒரு செயல் என்றுதான் கூறவேண்டும்.

தங்கம் சேமிப்பு பற்றி ஒரு அம்மையார் இங்கே பேசினார். நமது ரிசர்வ் வங்கிகூட தங்க இருப்பு என்று வைத்துள்ளது. தங்கமாக சேமிப்பது என்பது நல்ல கருத்துதான். ஆனால், திருமணங்களில் பெண் வீட்டார் கொடுப்பதும், மாப்பிள்ளை வீட்டார் பெற்றுக்கொள்வதும் அவர்களுக்குள்ளாக முடிவு செய்து கொள்வது தான் நல்லது. அதை அவர்கள் தான் தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். மாநாட்டில் அதுபற்றியெல்லாம் தீர்மானம் போட இயலாது என்பது என்னுடைய கருத்து.

சுயவேலை வாய்ப்புக்காக 'நகரத்தார் மையம்' ஒன்று கோவிலூரில் அமையவிருக்கிறது, அதன் மூலம் தேவைப்படும் உதவிகள். விவரங்கள் ஆகியவற்றை பலரும் தெரிந்துகொள்ள முடியும்.

அண்மைக் காலத்தில் 'குடும்ப நல நீதிமன்றங்கள்' அமைக்கப் பட்டுள்ளன. பலரும் நினைப்பது போல இந்த நீதிமன்றங்கள் கணவன், மனைவி இருவருக்கும் விவாகரத்து பெற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப் படவில்லை... கணவன், மனைவி இருவரின் பிரச்சனைகளை, தீர விசாரித்து, அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சேர்ந்து வாழ, அவர்களை சேர்த்து வைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகத்தான் குடும்ப நல நீதிமன்றங்கள் இன்று நாடு முழுவதும் தோற்றுவிக்கப் பட்டிக்கிறது.

கணவன், மனைவி இருவரும் சேர்ந்து விவாகரத்து கோரி நீதிமன்றங்களில் மனு செய்தால் நீதிபதிகள் என்ன செய்வார்கள்? ஒரு மூன்று மாதம் வழக்கை ஒத்தி வைப்பார்கள். எதற்காக ஒத்தி வைக்கிறார்கள்?



அந்த மூன்று மாதங்களிலாவது அவர்கள் தங்கள் பிரச்சனைகளைப் பேசித்தீர்த்துக் கொண்டு சமரசமாகப் சேர்ந்து வாழமாட்டார்களா? என்ற நல்ல நோக்கத்தில்தான் ஒத்தி வைக்கிறார்கள்.

அந்த மூன்று மாதங்கள் கழித்து, இருவரும் சேர்ந்து வாழ விரும்பவில்லையென்றால் விவாகரத்துக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. விவாகரத்து வழங்கிய பிறகு குழந்தைகளை யாரிடம் ஒப்படைப்பது? அவர்களின் பராமரிப்புக்கு யார் ஜீவனாம்சம் தருவது? என்பதை நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இப்படிப் பிரிந்தவர்கள் அதோடு வாழ்க்கை முடிந்து விட்டது என்றில்லாமல் முப்பது, முப்பத்தைந்து வயதுடையோர் மறுமணம் செய்து கொண்டு வாழ்க்கையைத் தொடரலாமா என்றால் நிச்சயமாகத் தொடரலாம். அதில் தவறு இருப்பதாக நான் கருதவில்லை.

மணமுறிவைத் தவிர்ப்பதற்காகக் கோவிலூரில் நமது அடிகளார் அவர்கள் 'Counciling Centre' என்ற அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தம்பதியரும், குடும்பத்தார்களும் ஆலோசனைக்காக வரலாம் (அப்போது சுவாமிகள் குறுக்கிட்டு, ஆலோசனைகள் கூறியும், ஜாதகக் கோளாறு இருந்தால் பரிகாரம் செய்து தம்பதியரை சேர்த்து வைக்கலாம் என்று கூறினார்)

வயதான தாய், தந்தையரை பிள்ளைகள்தான் காப்பாற்ற வேண்டும். அவர்களை விடுதிகளில் சேர்ப்பதைத் தவிர்த்து, நம்மோடுதான் வைத்துக் கொள்ளவேண்டும். நாம் செல்லும் ஊர்களுக்கு அழைத்துச் செல்லவேண்டும் அல்லது சொந்த ஊரிலேயே நல்லவசதி செய்து கொடுத்துப் பாதுகாக்க வேண்டும்.

வரதட்சணை கேட்பதும், வாங்குவதும் சட்டப்படி குற்றம் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். இரண்டு குடும்பத்தாரின் சம்மதத்தின்பேரில் கொடுத்து வாங்கிக்கொண்டு பிறகு மீண்டும் அந்த மணப்பெண்ணிடம் கார் வேண்டும், பணம் வேண்டும் என்று சொல்லி பிறந்த வீட்டிற்கு அனுப்புவது சட்டப்படி குற்றம். அந்தப்பெண் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தால் கணவன், மாமியார் மாமனார் எல்லோரும் இருக்க வேண்டிய இடம் எதுவென்று உங்களுக்கே தெரியும். இதை அறிவுரையாக யாரும் நினைக்க வேண்டாம். சட்டத்தில் உள்ளதைத் தான் கூறுகிறேன்.

இன்றைக்கு பெண்களுக்கு 30% சதவீத இடஒதுக்கீடு வேண்டும் என்று நாடாளுமன்றத்திலே குரல் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த மாநாட்டிலே பாருங்கள்... பெண்கள் கிட்டத்தட்ட 50% பேர்

வந்திருக்கிறார்கள். அடுத்த மாநாட்டில் பங்கேற்க இடஒதுக்கீடு அதிகம் வேண்டும் என்று ஆச்சிமார்கள் கேட்டால் தாராளமாக 75% இடத்தை அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டியது நமது கடமை... ஏனென்றால் செட்டியார்களைப் பாதுகாப்பது... செட்டிநாட்டு சமூகத்தைப் பாதுகாப்பது... நமது ஆச்சிமார்கள் தான். நமது ஆட்சி ஆச்சிமார்களின் கையில் தான் இருக்கிறது.


ஆக இந்த மூன்று நாட்களும் பல பயனுள்ள கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு இருக்கின்றன. இதுபோன்ற காரியங்கள் நிறைவேற நம்மவர்கள் சுவாமிகளுக்கு ஒத்துழைப்பாகவும், உறுதுணையாகவும் இருக்க வேண்டும். இது உயர்நீதிமன்ற உத்தரவு அல்ல... என்னுடைய அன்பான வேண்டுகோள். திரு. நாராயணன் அவர்களை நேற்றே பாராட்டினோம். கோவிலூர் ஆதீனகர்த்தர் எடுக்கும் நல்ல முடிவுகளுக்கு அவர் என்றும் உறுதுணையாக இருப்பார் என்று நம்புகிறேன். இவர் இளைஞர், நன்றாக செயல்படக்கூடியவர் என்று பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன், என் வாழ்த்துக்கள். அவர் எப்போதும் நல்லவிதமாக அடிகளாருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். மேலும் இருவரை பாராட்ட வேண்டும் முதலாமானவர் தேவகோட்டை திரு. ஏ. ராமனாதன் அவர்கள். நன்கு படித்தவர், நாம் இந்த மூன்று நாட்களும் மாநாட்டைச் சிறப்பாக நடத்த எல்லா வசதிகளோடு இந்த மண்டபத்தைக் கட்டி முடித்தவர், சுவாமிகளுக்கு எல்லாவிதத்திலும் உறுதுணையாக இருப்பவர் அவரைப் பாராட்டுகிறேன். அடுத்து ஆடிட்டர் திரு. எஸ்பி. எஸ்டி. பழநியப்பன் அவர்கள். அந்தக் காலத்திலேயே ஆடிட்டர் படிப்புப் படித்த குறிப்பிட்ட சில நகரத்தார்களில் ஒருவர். அவர் எப்போதும் சுவாமிகளுடனே இருந்து, சுவாமிகள் வெளிநாடு சென்றாலும் தமது சொந்த செலவில் கூடவே சென்று சுவாமிகளுக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கிறவர். அவரையும் பாராட்டுகிறேன்.

எங்களைப் போன்றவர்கள் அவ்வப்போது வந்து சுவாமிகளை தரிசித்துச் செல்வோம். இப்போது சுவாமிகள் உடன் இருப்பவர்கள் அனைவரும் எப்போதும் சுவாமிகளுக்கு உதவியாக, உறுதுணையாக இருந்து, நகரத்தார் நலத் திட்டங்களை நிறை வேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு நீதியரசர் ஏஆர். லக்குமணன் உரையாற்றினார்.



தவத்திரு. நாச்சியப்ப அடிகளுக்கு
நீதியரசர் பொன்னாடை அணிவிக்கிறார்.



மலாக்கா செட்டியார்களுக்குச் சொந்தமான துரௌபதியம்மன் கோயில்



மலாக்கா செட்டியார் சங்கத்தலைவர் சுவாமிகளை வரவேற்கிறார்...



கோலாலம்பூரில் சுவாமிகளை ஆடிட்டர் கிருஷ்ணன் மற்றும்
ஒரு சீனப்பெண்மணி ஆகியோர் வரவேற்றனர்.



மலேசியாவில் உள்ள கருப்பணசாமி...

2002 மே மாதம் 3,4,5, தேதிகளில்
96 ஊர் நகரத்தார் மாநாடு ஏற்பாட்டுக்குழு

தலைவர்
சீர் வளர் சீர் நாச்சியப்ப
ஞான தேசிக சுவாமிகள்

செயலர்
நா. நாராயணன்

செயற்குழு உறுப்பினர்கள்
வி.என். சிதம்பம்
சோம. நாராயணன்
முனைவர். சுப. அண்ணாமலை
சொ.சொ.மீ. சுந்தரம்
மு. கண்ணப்பன்
ஏ. இராமநாதன்
வெ.ராம.சிவ. மீனாட்சிசுந்தரம்
பெரி. சொக்கலிங்கம்
டாக்டர். எம்.ஆர். முத்தையா
என்.என். சுவாமிநாதன்
அரு.நா.நா. நாராயணன்
மா. தனலக்குமி நாராயணன்
கே.ஆர். அண்ணாமலை
சி.வ.சி.சி. சின்னக்கருப்பன்
மூ.கரு.அ. பஞ்சநாதன்
எஸ்பி. எஸ்டி. பழனியப்பன்
பழ. கருப்பையா
ச. மெய்யப்பன்

தங்கத் திருமண் உபயம்



நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு கால் கிலோ எடையுள்ள தங்கத்தால் (ஒரு லட்சத்து நாற்பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள) செய்யப்பெற்ற திருமண் பள்ளத்தூர் சிதம்பரம் செட்டியார் – விசாலாட்சி தம்பதியர் செலுத்துகின்றனர். இந்தத் திருமண் சென்னையிலுள்ள பிரபல செட்டிநாடு நகைகளைச் செய்து வருகின்ற அரிமளம் எம். கண்ணன் அவர்களால் செய்யப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கோவிலூர் ஆதீனங்களுக்குக் கொடுத்துத்தான் பழக்கம்...

திருவண்ணாமலையில் ஈசான்ய தீர்த்தத்தின் தென்கரையிலுள்ள ஆலமரத்தின் கீழ் சிவயோக சமாதியில் ஆழ்ந்திருப்பார் ஈசான்ய ஞான தேசிகர். இவர் தவத்துக்கு இடையூறு வராமல் காக்க, புலியொன்று வந்து காவல் காக்கும். தேசிகர் புலியைத் தடவிக்கொடுத்து, அண்ணாமலையாரே புலி வடிவில் வந்துள்ளார் என்று நம்பி அண்ணாமலையே என்னரசே! என்று அழைத்து மகிழ்வார். இந்தப் புலியுடன் விளையாடும் புனிதரைத் தரிசிக்க, கோவிலூர் ஆண்டவர் முத்துராமலிங்க ஞானதேசிகர் வந்தார். அப்போது தேசிகருக்குத் தொண்டரான முத்துச்சாமி உடையார் கோவிலூர் ஆண்டவரின் விரலில் இருந்த மோதிரத்தைப் பார்த்தார். ஆண்டவரின் முகப் பிரகாசத்தைவிட, இந்த மோதிரப் பிரகாசம் அவர் மனத்தை ஈர்த்தது. ஆகா இது எத்தனை பிரகாசமாக இருக்கிறது என்று வியந்தார்.

உடனே ஆண்டவர் "அப்படியானால் இந்தப் பிரகாசம் உனக்கே இருக்கட்டும்" என்று கூறி மோதிரத்தைக் கழற்றி முத்துச்சாமி உடையாரிடம் கொடுத்துவிட்டார். ஆசையைப் பூண்டோடு ஒழித்துவிட்ட ஆண்டவரின் காலம் முதல் இன்று வரை கோவிலூர் ஆதீனங்களுக்குக் கொடுத்துத்தான் பழக்கமே தவிர, வாங்கிப் பழக்கமில்லை.

– (கோவிலூர் மாநாட்டில் திரு. சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் உரையிலிருந்து)

கோயில் மாலையுடன் கோவிலூர் மாலை...!

திருமணங்களுக்குச் சம்பந்தப்பட்ட கோயில்களிலிருந்து கோயில் மாலை வருவது போல் கோவிலூர் மடத்திலிருந்தும் மாலை வழங்குகிறோம். கோயில் மாலையைப் போலவே கோவிலூர் மாலையையும் பெற்றுத் தம்பதியர் இணைபிரியாது வாழ்ந்திட வாழ்த்துக்களோடு வழங்கப்படும் என்று சுவாமிகள் கூறினார். ஆகவே இனிவரும் ஒவ்வொரு திருமணத்திற்கும் குறிப்பிட்ட கோயிலுக்குச் சொல்வது போல, கோவிலூருக்கும் தகவல் சொல்ல வேண்டும்.

மே மாதம் 3, 4, 5 தேதிகளில் நடைபெற்ற 96 ஊர் நகரத்தார் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்...!

சித்ரபானு ஆண்டு சித்திரை மாதம் 20, 21, 22 தேதிக்கு, 2002ம் ஆண்டு மே மாதம் 3, 4, 5 தேதிகளில் கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் நாச்சியப்ப அடிகள் தலைமையில் கோவிலூரில் நடைபெற்ற தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் மாநாட்டில் நகரத்தார் விவாதித்து மாநாட்டின் இறுதி நாளன்று ஏக மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு:

தீர்மானம் 1

நகரத்தார் பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்கும்படி அவர்களுக்கு அனைத்து வகையிலும் உதவுவதற்கும் வேலைவாய்ப்புக் கல்வி தந்து வழி காட்டுவதற்குமாக ரூபாய் ஏழு கோடியை இலக்காகக் கொண்டு நிதிதிரட்டி ஓர் நகரத்தார் நல்வாழ்வு அறநிலை ஏற்படுத்துவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது. அதற்கு முதல் ஆதார நிதியாக சீர் வளர் சீர் நாச்சியப்ப அடிகளார் வழங்கும் ஒரு கோடி நிதியுதவிக்கு இம்மாநாடு வணக்கத்துடன் நன்றி செலுத்துகிறது. நகரத்தார் புள்ளிகள் அனைவரும் தாமாக முன்வந்து, அவ்அறநிலையை நகரத்தார் அனைவரும் பங்கு கொள்ளும் அறநிலையாக ஆக்குமாறு நகரத்தார் பெருமக்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. நல்மனம் படைத்த நம் இனத்துப் பெருஞ்செல்வர்கள் நன்கொடைகள் தந்து ஏழு கோடி என்ற இலக்கை எட்ட உதவ வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. முன்மொழிந்தவர் வீர. முத்துக்கருப்பன், வழிமொழிந்தவர் – கி. ரெகுபதி சுப்பிரமணியன்.

தீர்மானம் - 2

கோவிலூர்த் திருமடத்தில் ஒரு நகரத்தார் தலைமை மையம் ஏற்படுத்தி, அனைத்து நகரக்கோயில்கள், நகரத்தார் சங்கங்கள், மற்றும் உலகெங்கும் உள்ள நகரத்தார் சங்ககங்களுக்குத் தகவல் தரவும், தகவல் பெறவும், வேலை வாய்ப்பு மையமாகச் செயற்படவும் இந்திய ஆட்சிப் பணிக்கான கல்விக்குப் பயிற்சி தருதல் போன்றவற்றுக்கு உதவுமாறும் இவை போன்ற இணைப்பு முயற்சிகளுக்கு உதவுவதென இம்மாநாடு தீர்மானிக்கிறது. முன்மொழிந்தவர் – ச. மெய்யப்பன், வழிமொழிந்தவர் – எம். தனலக்குமி நாராயணன்

தீர்மானம் - 3

நகரத்தார் இன மகளிருக்குக் கல்விதந்து, வேலைவாய்ப்புத் தந்து, சுயவேலை வாய்ப்பை மேற்கொள்ள உதவி செய்து அனைத்து வகையாலும் அவர்களை மேம்படுத்துவதற்கு நமது நகரத்தார் நிறுவனங்களும் சங்கங்களும் முன்வரவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. முன்மொழிந்தவர் – காசு. மணியன், வழிமொழிந்தவர்

சுப.சித. பழனியப்பன்

தீர்மானம் - 4

உலகெங்கும் மற்றும் இந்திய நாடு முழுவதும் நகரத்தார்களுக்குரிய நகர விடுதிகள், கோயில்கள் போல்வனவற்றில் இன்று நலிவடைந்த நிலையிலுள்ளனவும் பாதுகாப்பின்றி இருப்பனவுமானவற்றைப் பற்றி ஆராய்ந்து, இயன்ற வரை சொத்துக்களை மீட்கவும், காக்கவும், வளர்க்கவும் அவ்வந்நிருவாகங்களுக்கு உதவ, சுவாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்துச் செயற்பட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் – வி.என். சிதம்பரம், வழிமொழிந்தவர் – டாக்டர். சண்முகம்

தீர்மானம் - 5

அண்மைக் காலமாக நகரத்தார் சமூகத்தை கவலைக்குள்ளாக்கும் செய்தி புதிதாக முளைத்து வரும் முதியோர் இல்லங்களாகும். வயதானவர்கள் ஒரு சுமையாகக் கருதப்படுவதையே இம் முதியோர் இல்லங்களின் தோற்றம் குறிக்கிறது. சுமந்து, பெற்று, பாலூட்டி, வளர்த்த தாயையும் கல்வி தந்து அவனை இந்த உலகோடு பொருந்தி வாழ்வதற்குத் தயார் செய்த தந்தையையும் ஒரு சுமையாகக் கருதி முதியோர் இல்லத்தில் பணம் கட்டியோ கட்டாமலோ சேர்த்து விட்டுவிட்டுக் கையைக் கழுவிக் கொள்வது அருவருக்கத்தக்க பொறுப்பற்ற போக்காகும். பிறந்த பிள்ளையை விடுதியில் தள்ளிப் பணம் கட்டிவிட்டுப் பொறுப்பைக் கைகழுவாமல் நேரடியாக வளர்த்த பெற்றோராக்கு இளையோர் காட்டுகிற நன்றிக் கடனா இது.

வயதானவர்களுக்கு அடிப்படைத் தேவை அன்பு; சோறில்லை, அது எங்கும் கிடைக்கும்; வள்ளலார் சத்திஞான சபையில்கூட அதைப் பெறலாம். முதல் இருபது ஆண்டுகள் பிள்ளைகளை வளர்ப்பதற்கும், பின் இருபது ஆண்டுகள் பெற்றோரைக் காப்பதற்குமே குடும்ப அமைப்பு ஏற்பட்டது. வேறு வழியில்லாத, பிள்ளைகள் இல்லாத வயதானவர்களைக் காக்கும் பொறுப்பைச் சமூகம் ஏற்றுக் கொள்வது நியாயம்! அவர்களுக்காக ஒன்றிரண்டு முதியோர் இல்லங்கள் இயங்குவது தவிர்க்க இயலாதது. அப்படி அல்லாத நிலையில் முதிர்ந்த பெற்றோரைப் பேண இளந்தலைமுறையினர் மறுப்பது

நன்றி கொன்ற செயலாகும்! அது சமூகத்தின் பின்னடைவாகும். தாயையும், தந்தையையும் முதியோர் இல்லத்தில் அன்புக்கு ஏங்கும்படி விட்டு விட்டுக் கோயிலுக்குப் போனாலும் அறவழிபாடாகாது என்று இம்மாநாடு மீண்டும், மீண்டும் வலியுறுத்துகிறது. முன்மொழிந்தவர் – முனைவர் தமிழண்ணல், வழிமொழிந்தவர் – நா. நாராயணன்

தீர்மானம் - 6

கண்ணகி காலத்திலிருந்து கண்ணுக்குத் தெரிந்த தொடர் வரலாறுடைய நகரத்தார் சமூகத்தில் அண்மைக் காலமாகப் பெருகி வரும் மணமுறிவுகள் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. மாற்றங்கள், உயிரோட்டமுள்ள சமூகத்தில் மாற்ற முடியாதவை என்பதை யார் யாரும் அறிந்தே இருக்கின்றனர். காலங்கள் தோறும் நடை, உடை, நாகரிகம், பண்பாடு, தொழில் ஆகிய அனைத்து நிலைகளிலும் நகரத்தார் சமூகம் மாறியே வந்திருக்கிறது. ஆனால் சில நிலைகளில் மாறாமலும் இருந்து வந்திருக்கிறது என்பதைவிட, காலங்கள்தோறும் மேலும் மேலும் கெட்டி, தட்டி, இந்தச் சமூகத்தின் உயிர்நாடியான கொள்கையே மாறாத் திருமண வாழ்வுதான் என்று நிறுவி அதன்படி ஒழுகி வந்திருக்கின்றனர்.

சங்கிலிக் கணுக்களின் இணைப்பு விட்டுப் போய்விட்டாலும் தாலி பெருகியது என்றுதான் சொல்லுவார்களே தவிர தாலி அறுந்துவிட்டது என்று பேச்சோட்டத்தில் கூடச் சொல்ல அஞ்சுவார்கள். அத்தகைய சமூகத்தை அறுத்துக் கட்டுகிற சமூகமாக மாற்ற முயல்பவர்கள் சிறுபான்மையினர் தான் என்றாலும் அவர்கள் பெரும்பான்மையராக மாறுவதற்கு முன்னர் சமூகம் விழித்தெழ வேண்டியது காலத்தின் கட்டாயம். மணமுறிவுகளுக்காக இன்று சொல்லப்படும் காரணங்களில் எதுவும் புதியதில்லை. இந்தக் காரணங்களெல்லாம் அலசப்பட்டுத் தான் சமூகம் மாறாத் திருமணத்தைத் தன்னுடைய கொள்கையாக நீண்ட நெடுங்காலமாகப் பேணி வந்திருக்கிறது.

மணமுறிவால் பெண்ணே பெரிதும் பாதிக்கப்படுகிறாள். ஆண் எளிதாக மறுமணம் செய்து கொள்ள முடிகிறது. பெண் பழமைப்பட்டு நீரோட்டத்திலிருந்து ஒதுங்கிப் போய்விடுகிறாள். அதைவிட மணமுறிவு பிறந்த பிள்ளைகளின் வாழ்க்கையை வேரூன்ற வேண்டிய வயதில் வேரறுத்து விடுகிறது. ஆகவே புறக்கணிக்கப்படும் அந்தப் பிள்ளைகள் வளர்ச்சி குன்றிப் போவது இயல்பே! இந்த மணமுறிவுகள் வருங்காலத் தலைமுறையைச் சீரழித்து இந்தச் சமூகத்தை முடம்பட்டுச் செய்யும் என்பதே எல்லாவற்றிலும்

மிகுதியாக அஞ்சச் செய்வது! முந்திய காலத்தில் இந்தச் சமூகத்தைப் பீடித்த "வைத்து விட்டுச் செய்வது" என்னும் கொடுமையிலிருந்து மீண்ட இந்தச் சமூகம் இப்போது மணமுறிவில் சிக்கிக் கொண்டு தவிக்கிறது. இதிலிருந்து மீளும், மீளவேண்டும் என்று இந்த மாநாடு விரும்புகிறது.

பெண்ணையும், அவள் பெற்ற பிள்ளைகளின் வாழ்க்கையையும் பெருமளவுக்குப் பாதிக்கின்ற இத்தகைய மணமுறிவுகளை முறியடிக்கும் வண்ணம் நகரத்தார் சமூகம் முழு விழிப்படைவதுடன், அந்தந்த மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டாருக்கு உடன் பங்காளிகள் அவர்களை நேரடியாக அறிந்தவர்கள் என்னும் முறையில், அதில் தலையிட்டு அவர்களை இணக்கப்படுத்தி மீண்டும் குடும்ப நீரோட்டில் கலக்கும்படி செய்ய வேண்டும் என்றும் அதற்கு மாப்பிள்ளை தரப்பிலோ பெண்ணின் தரப்பிலோ முறைகேடான வகையில் ஒத்துழையாமை காணப்படின், அந்தத் தரப்பினரை நகரத்தாரின் பொது நாகரிகத்திற்கு ஊறு விளைவிப்பவர்கள் என்று கருதி உடன்பங்காளிகள் அதில் உரிய வகையில் முடிவெடுத்து நடைமுறைப்படுத்தி இந்தச் சமூகத்தின் மேன்மையான பண்பாட்டை நிலைநிறுத்தும்படி இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது. முன்மொழிந்தவர் – பழ. கருப்பையா, வழிமொழிந்தவர் – முனைவர் சுப. அண்ணாமலை

ஆந்திராவில் கோவிலூர் மடம்...!

கோவிலூர் ஆதீனத்தின் கிளைமடம் ஆந்திர மாநிலம் திருமலை திருப்பதியில் தொடங்க விருப்பம் உள்ளது என்று சுவாமிகள் சொன்னவுடன், அம்மாநில உயர்நீதிமன்ற நீதியரசர் அரு. இலக்குமனார் ஆந்திர முதல்வரைச் சந்தித்து திருப்பதியில் கிளை மடம் அமைவதற்கு இடம் பெற்றுத் தருவதாகக் கூறினார். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் திருப்பதியில் கோவிலூர் ஆதீனத்தின் கிளைமடம் நிறுவப்பெறவுள்ளது.



வாழ்த்துகிறோம்

நற்சாந்துபட்டி கேஆர். வீரப்பசெட்டியார் (கிரில்லோ கார்மெண்ட்ஸ், திருப்பூர்) புதல்வன் விஆர். வினோத்குமார் நடந்து முடிந்த பிளஸ்டூ தேர்வில் 1092/1200 மதிப்பெண்களைப் பெற்றுள்ளார். மாணவன் வினோத்குமாரை தனவணிகன் வாழ்த்துகிறது.

தற்பொழுது உலகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த கோர யுத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு வெற்றி கிடைத்து உலகமெலாம் சாந்தியும், சமாதானமும் நிலவ வேண்டுமென்று தொண்ணூற்றாறூர் நகரத்தார்கள் கூடிய இக்கூட்டம் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறது.

ஏற்பட்டிருக்கும் மனக்கஷ்டமும், பொருள் நஷ்டமும் இவ்வளவு அவ்வளவு என்று அளவிட்டு உரைக்க முடியாத நிலையில் இருக்கிறது. வெளிநாட்டிலுள்ள சொத்துக்களும், தொழில்களும் என்ன கதியில் இருக்கின்றன என்றே அறிந்து கொள்ளக்கூட முடியாத இந்த

புதையல் 17 (25-02-1942)

1942-ல் கோவிலூரில் கூடிய தொண்ணூற்றாறூர் நகரக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்...!

நகரத்தார்கள் தொழில் நடத்துகிற முக்கியமான பிரதேசங்களான இந்தோனேஷியா, மலேயா, பர்மா முதலான இடங்களில் திடீரென ஏற்பட்ட ஜப்பானின் படையெடுப்பால் அங்குள்ள நமது தொழில் ஸ்தாபனங்கள், சிப்பந்திகள், சொத்துக்கள் ஆகிய எல்லாம் தற்பொழுது என்ன நிலைமையில் இருக்கின்றன என்றே அறிய முடியவில்லை. மேற்படி தொழில் ஸ்தாபனங்களுக்கும், தாய்நாட்டிலுள்ள சுவான்தார்களுக்கும் எவ்விதமான தாக்கல், தகவல் தொடர்பும் தற்பொழுது இல்லாமலிருக்கிறது. மேற்படி தொழில் ஸ்தாபனங்களிலிருந்து தற்பொழுது பணம் வரவழைப்பது முற்றிலும் இயலாத காரியமாகவும் இருக்கிறது. அதன் காரணமாக செட்டியார்களுக்கு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அந்நிய நாடுகளிலுள்ள செட்டியார்களுடைய தொழில் ஸ்தாபனங்களுக்கு லாபம் கிடைத்திருக்கிறதென்று நிர்ணயித்து வரி விதிக்கப்படுகிறது.

தற்பொழுது மகா நெருக்கடியான நிலைமையில் வரையறைக்குட்படாத பொருள் தட்டுப்பாட்டினால் தான், வெளி நாட்டிலுள்ள தொழில் ஸ்தாபனங்களின் வருமானத்தின் மீது வரி விதிப்பையும், ஏற்கனவே வரி விதித்து, டிமாண்ட் நோட்டீஸ் சார்பு செய்திருக்கும் கேஸ்களில் பணம் கட்டும்படி நிர்பந்தப்படுத்தும் நடவடிக்கை எடுத்துக் கொள்வதையும், என்றும் போல் அமைதியும்,

சமாதானமும், நிலவும் வரை நிறுத்தி வைக்க வேண்டுமென்று காரைக்குடி, தேவகோட்டை, சிவகங்கை, இன்கம்டாக்ஸ் ஆபிஸர்களையும், அமித லாப வரி ஆபிஸர்களையும், இன்ஸ்பெக்டிங் அஸிஸ்டெண்ட் கமிஷனரையும், அப்பெலெட் அஸிஸ்டெண்ட் கமிஷனரையும், அமித லாப வரி அஸிஸ்டெண்ட் கமிஷனரையும், சென்னை இன்கம்டாக்ஸ் கமிஷனரையும், டெல்லியிலுள்ள சென்ட்ரல் போர்ட் ஆப் ரிவினியூ மெம்பரையும் தொண்ணூற்றாறூர் நகரத்தார்கள் கூடிய இந்த மகாநாடானது கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானத்தை கவர்ன்மெண்டிற்கும் சம்பந்தப்பட்ட மற்றவர்களுக்கும் தெரிவித்து, அது சம்பந்தமான சகல நடவடிக்கைகளை–யும் மேற்கொள்ள வேண்டும்.

தேவகோட்டை உ.ராம. உ.மு.சுப. லெட்சுமணன் செட்டியார் (பொக்கிஷதார்) காரைக்குடி மெ.செ.ச. சிதம்பரம் செட்டியார் (பொக்கிஷதார்) காரைக்குடி அ.மு.க.மு.க. கருப்பஞ் செட்டியார், காரைக்குடி அ.வி.பழ.சித. இராமனாநாதன் செட்டியார், காரைக்குடி சா. கணேசன் (ஜெனரல் செக்ரட்டரி) காரைக்குடி முத்து. அரு. ரா. அரு. அருணாச்சலர் செட்டியார், கானாடுகாத்தான் சா.ராம.மு.சித.மு. சிதம்பரம் செட்டியார், கோட்டையூர் அ.க.அ.சித.அழ. சிதம்பரம் செட்டியார், பள்ளத்தூர் உ.அ.பெரி.மு. அருணாசலர் செட்டியார் சோழபுரம் சுப.க.அ. இராமநாதன் செட்டியார் நாட்டரசன் கோட்டை கண.உல.வெ. வெள்ளையப்ப செட்டியார், விராமதி சுப.மு. இராமசாமி செட்டியார், நெற்குப்பை பழ.பெரி.பெரி. பெரியகருப்பஞ் செட்டியார், பூலாங்குறிச்சி வ.சொ.ராம. வள்ளியப்ப செட்டியார், பலவாங்குடி சு. சோமசுந்தரம் செட்டியார், ராயவரம் வக்கீல் வி. ஷண்முகம் செட்டியார், புதுவயல் எ.மு. முத்தப்ப செட்டியார், கீழச்சிவப்பட்டி அழ.அ.மு.கரு. காசி விஸ்வநாதன் செட்டியார் ஆகிய பதினெட்டுப் பேர்களைக் கொண்ட கமிட்டி நியமிக்கப் பெற்றது.

இது சம்பந்தமான விஷயங்களுக்கு ஏற்படுகிற செலவுகளுக்கு ரூ. 25,000 நிதி திரட்ட காரைக்குடி கி. நாராயணன் செட்டியார், காரைக்குடி அழ.கரு. அடைக்கப்ப செட்டியார், ஆத்தங்குடி, ராம.ஆ.ராம. ஆறுமுகம் செட்டியார், சோழபுரம் சுப.க.அ. லெட்சுமணன் செட்டியார், ஆகிய நால்வர் கொண்ட கமிட்டி நியமிக்கப் பெற்றது. அவர்கள் இன்கம்டாக்ஸ் செலுத்துகிற நகரத்தார்களிடம் சென்று நன்கொடை வசூல் மூலம் ரூ 25,000 கொண்ட நிதியை திரட்டுகிறதென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

யுத்தத்தால் பர்மாவில் ஏற்பட்டிருக்கிற குழப்பம் காரணமாக பர்மாவிலுள்ள இந்தியர்கள் தங்கள் தங்கள் உயிருக்குப் பயந்து சொத்தும்

தொழிலும் இருக்கிற பிரதேசத்தை விட்டு வெளியேறி பல்வேறு இடங்களில் ஸ்திரமான இருப்பு அற்ற நிலைமையில் இருப்பதால் பர்மாவில் நிலவரி, வருமானவரி, சொத்துவரி முதலியவற்றை வசூலிப்பதையும், வசூலாகாத காரணத்தால் குறிப்பிட்ட சொத்துக்களின் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்வதையும் அமைதியான நிலைமை ஏற்படுகிறவரையில் கண்டிப்பாக நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்திய அரசாங்கம் பிரிட்டீஷ் அரசாங்கத்தின் மூலம் பர்மா அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

கல்யாணத்தை மூன்று நாளிலேயே நடத்துவதென்றும் பெண் வீட்டிலேயே சாப்பாடு வைத்துக் கொள்வதென்றும், திருப்பூட்டுவதற்கு முதல் நாள் இரவிலிருந்தே தான் சாப்பாடு ஆரம்பிப்பதென்றும், திருப்பூட்டியதற்கு மறுநாள் மத்தியானம் ஒருவேளை மட்டும் மாப்பிள்ளை வீட்டில் பெண் அழைப்புச் சாப்பாடு வைத்து கொள்வதென்றும் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டில் தின் சாமான் கொட்டி வைப்பதில்லை என்றும், அதற்காகப் பணம் கொடுப்பதில்லை என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

கல்யாண காலத்திற்குப் பிறகு சம்பந்தியாளுக்கு "முறை" என்ற வகையில் எதுவும் கொடுத்து வாங்கிக் கொள்வதில்லையென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

எந்த விசேஷத்திலும் கூடிக் கொள்கிற பங்காளிகள், தாய்ப்பிள்ளைகள் தவிர யாரும் பணம் எழுதுவதில்லையென்றும், எழுதிக்கொள்வதில்லையென்றும் யாருக்கும் பெட்டி, பாக்கு, சட்டி, பழம் கொடுத்து வாங்குவதில்லையென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப் புதுமை, தீர்த்தங் குடித்தல், வேவு எடுத்தல், வேறே வைத்தல், முகூர்த்தம் வைத்தல் பள்ளிக்கூடத்தில் வைத்தல், சடங்கு கழித்தல், ஆயா வீட்டிற்கு அழைத்தல், குடிபுகுதல் முதலியவற்றிற்கு மாமாக்காரர், சகோதர, சகோதரி முதலிய தாய்பிள்ளைகள் தவிர வேறு யாரையும் அழைப்பதில்லையென்றும், அவைகளை நடைமுறையிலுள்ள படி விசேஷமாக நடத்துவதில்லை என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

காப்புக் கட்டுப் புதுமையை தலைப்பிள்ளை ஒன்றுக்கு மட்டுமே ஒரே வேளை விசேஷமாக நடத்துகிறது என்று தீர்மானிக்கப் பெற்றது.

எல்லா நன்மை தின்மை விசேஷங்களிலும் சட்டி, பெட்டி வகையறாச் சாமான்களோ, பணமோ கொடுப்பதும், வாங்குவதுமில்லையென்று தீர்மானிக்கப் பெற்றது.

மேற்கண்ட எல்லாத் தீர்மானங்களையும் அச்சிட்டு, ஒவ்வொரு ஊர் நகரத்தார்களுக்கும், ஒன்பது நகர கோவில்களுக்கும் அனுப்பி சமூக சீர்திருத்த சம்பந்தமான தீர்மானங்களின்படியே நகரத்தார்கள் யாவரும் சித்திரபானு வருடம் சித்திரை மாதம் முதல் தேதி முதல் நடந்து வருகிறதென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

செட்டிநாடு வரலாறு:

புதுக்கோட்டை சமஸ்தானம் வெளியிட்ட அம்மன் காசு

முனைவர். நா.அழகப்பன்,
எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.,
சிதம்பரம்.

புதுக்கோட்டை பகுதியில் வாழும் மக்கள் "ஒரு அம்மன் காசு கூட என்னிடம் இல்லை'' என்றும் ''ஒரு அம்மன் காசு கூட உனக்குத் தரமாட்டேன்'' என்றும் இன்றைக்கும் சொல்கிறார்கள். இதைக் கேட்ட இந்தக் கட்டுரை ஆசிரியருக்கு அம்மன் காசின் வரலாற்றை அறிய ஆவல் ஏற்பட்டது. பற்பல நூல்களிலிருந்து செய்திகள் சேகரிக்கப்பட்டன. அதன் விளைவாக இந்த ஆராய்ச்சிக் கட்டுரை வடிவம் பெற்றது.

புதுக்கோட்டை சமஸ்தானத்தை விஜய ரகுநாத தொண்டைமான் என்ற அரசர் கி.பி. 1730 ஆம் ஆண்டு முதல் கி.பி. 1767 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார். இவரது சமயக் குருவாக இருந்தவர் கோபால கிருஷ்ண சாஸ்திரி என்பவர் ஆவார். இந்த கோபால கிருஷ்ண சாஸ்திரி, விஜயரகுநாத தொண்டைமானை புதுக்கோட்டையில் தசரா பண்டிகை கொண்டாடும்படி கேட்டுக் கொண்டார். அவரின் விருப்பப்படி தசரா பண்டிகை புதுக்கோட்டையில் கொண்டாடப்பட்டது. அப் பண்டிகை நடைபெற்ற 10 நாட்களிலும் பிராமண குலத்தைச் சார்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவருக்கும் தானம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் பிராமண குலத்தைச் சார்ந்த ஒவ்வொரு நபருக்கும் ஒரு படி அரிசியும் நான்கு அம்மன் காசுகளும் வழங்கப்பட்டது. பிராமணர்களுக்கு தானமாக வழங்குவதற்காகவே அம்மன் காசை முதன் முதலில் கி.பி. 1738 ஆம் ஆண்டு தயாரித்தனர். அப்போது அந்த அம்மன் காசு சமயச் சடங்கிற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. அது செலவாணியாக புதுக் கோட்டை சமஸ் தானத்தில் கொடுக் கல்வாங் கலுக்குப்



இருப்பின் பயன்படுத்தப்படவில்லை. இந்த அம்மன் காசு 1738 ஆம் ஆண்டு முதல் 1905 ஆம் ஆண்டு வரை சமயச் சடங்கிற்காக அதாவது பிராமணர் களுக்குத் தானமாகக் கொடுப்ப தற்காக மட்டுமே பயன் படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மதச்சடங்கிற்காக தயாரிக்கப்பட்ட இந்த அம்மன் காசை செலவாணியாக அதாவது கொடுக்கல் வாங்கலுக்கு பயன்படுத்தலாம் என்று புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவானாக இருந்த சேஷய்யா சாஸ்திரி 1906 ஆம் ஆண்டு சட்டம் இயற்றினார். இதன் பின்னரே அம்மன் காசு கொடுக்கல் வாங்கலுக்கு செலாவணியாக பயன்பட ஆரம்பித்தது. இந்த அம்மன் காசு தயாரிக்கும் பணி இலண்டனில் இருந்த ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு ஏறக்குறைய 2 லட்சம் அம்மன் காசுகள் அச்சிடப்பட்டது. 1919 ஆம் ஆண்டு 8 லட்சம் அம்மன் காசுகள் அச்சிடப்பட்டது. 1934 ஆம் ஆண்டு 8 லட்சம் அம்மன் காசுகள் அச்சிடப்பட்டது. பின்னர் இந்தக் காசை அச்சிடச் செலவு அதிகமானது. அதாவது இந்த அம்மன் காசின் மதிப்பை விட அக்காசைத் தயாரிக்கத் தேவையான செம்பின் விலை அதிகமாக இருந்தது. ஆகவே தான் புதுக்கோட்டை சமஸ்தானம் இந்த அம்மன் காசை வெளியிடுவதை 1934 ஆம் ஆண்டோடு நிறுத்திக் கொண்டது. இருந்த போதிலும் இந்த அம்மன் காசு 1948 ஆம் ஆண்டு வரை புதுக்கோட்டை சமஸ்தானத்தில் புழக்கத்தில் இருந்த இந்த அம்மன் காசுக்கு பிரிட்டிஷ் இந்திய அரசின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. ஆகவே தான் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இருந்த பிரிட்டிஷ் இந்திய அரசின் தபால் நிலையங்களில் அம்மன் காசுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தபால் துறையினர் அம்மன் காசுகளை புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கருவூலத்தில்(Treasury) கொடுத்து விட்டு அதன் மதிப்பிற்கு நிகரான பிரிட்டிஷ் பணத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இந்த அம்மன் காசின் ஒரு பக்கத்தில் புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமாகிய பிரகதம்மாள் அம்மனின் உருவம் அமர்ந்த நிலையில் பொறிக்கப் பட்டிருந்தது. இதன் காரணமாகவே இக்காசு "அம்மன் காசு" எனப் பெயர் பெற்றது. இக் காசின் மறுபக்கத்தில் இதனை முதன் முதலில் வெளியிட்ட விஜயரகுநாத தொண்டை மான் என்ற அந்த அரசரின் பெயரின் ஒரு பகுதியாகிய 'விஜய' என்ற சொல் தெலுங்கு மொழியில் பொறிக்கப் பட்டிருந்தது. 'தனவணிகன்' இதழின் வாசகர்களே! உங்களுக்கு ஒரு அன்பார்ந்த வேண்டுகோள். இந்த அம்மன் காசு தங்களிடம் இருப்பின் அதனை வரலாற்றுச் சின்னமாகக் கருதி பாதுகாத்து வையுங்கள்! பேரன் பேத்திகளுக்கு இக்காசைக் காட்டி அதன் வரலாற்றுப் பின்னணியைச் சொல்லி மகிழுங்கள்!! நிறைய அம்மன் காசுகள் இருப்பின் சில காசுகளை அருகில் உள்ள அருங் காட்சியகத்திற்குக் (Museum) கொடுத்து வரலாற்றுத் தொண்டு செய்யுங்கள்!!!

1936-ல் நடைபெற்ற தொண்ணூற்றாறு ஊர் நகரத்தார் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்!

14-11-36 ல் கோவிலூரில் கூடிய தொண்ணூற்றாறூர் கூட்டம் என்கிற "அகில தனவணிக மகாநாட்டில்" ஜெயங்கொண்டபுரம் திருவாளர் மெ.ராம.மெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் செய்யப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. இந்திய தேச விடுதலைக்குப் பாடுபடும் பெரிய ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபையில் நகரத்தார் அனைவரும் சேர்ந்து தேச நன்மைக்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

2. வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தலிலும் சட்டசபை முதலான தேர்தல்களிலும் காங்கிரஸின் சார்பாக நிறுத்தப்பெறும் அபேட்சகர்களுக்கே வாக்குக் கொடுத்து தேசத்தின் பெருமையைக் காப்பாற்றுவதில் நகரத்தாரும் பங்கு கொள்ள வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

3. நகரத்தார்களில் மிகப் பெரும்பாலாரை ஒரு சில பணக்காரர்களும் பட்டதாரிகளும் பயமுறுத்தி அடக்கி ஆள நினைப்பதை இம் மகாநாடு கண்டிப்பதுடன் நகரத்தார்களுக்குள் பணத்திற்காகவும், பட்டத்திற்காகவும், எவருக்கும் உயர்வு கொடுத்து யாரும் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் யாவரும் சமம் என்ற உணர்ச்சியை பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

4. அந்நிய அரசாங்கத்தினிடம் பட்டம் வாங்குவது அடிமை என்ற எண்ணத்தை விருத்தி செய்வதும் தேசத்துக்கு விரோதமானதும், ஆதலால் பெருமை தாங்கிய நமது நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த சிலர் பெற்றிருக்கும் பட்டங்களை விட்டுவிட வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

5. நாட்டுக்கோட்டை நகரத்தார் அசோசியேஷன் நகரத்தார்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல, ஆதலால் சென்னை நகர பரிபாலன சபையிலும்

நாட்டுக்கோட்டைச் செட்டியார் அசோசியேஷனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற ஸ்தானங்களை நகரத்தார் சமூகம் முழுமைக்கும் ஒட்டுரிமை பாத்தியமுடையதாக ஆக்க வேண்டுமென்று அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

6. குற்றியிரோடு இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நம் சமூகத்தில் ஒருவர் கடைசிக் காலத்தில் மந்திரி பதவி ஏற்றுக் கொண்டதற்கு இம் மகாநாடு பெரிதும் வருந்துகிறது.

7. நம் சமூகத்தவரைக் குறிப்பிடுங்கால் "செட்டி" என்றும், நம் நாட்டை குறிப்பிடுங்கால் "செட்டிநாடு" என்றும் குறிக்கப்படுவது அனுபவத்தில் இழிவாகக் கருதப்படுவதால் இனி எந்த இடத்திலும் "செட்டியார்" என்றும், "செட்டியார் நாடு" என்றுமே குறிப்பிட வேண்டும் என இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

8. நமது நகரத்தார் மகாநாட்டை ஆண்டுதோறும் கூட்டி சமூகத்திற்கு வேண்டிய நன்மைகளை முடிவு செய்ய வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

எல்லா ஊர்களிலும்முள்ள நகரத்தார் அனைவருக்கும் அச்சிட்ட அழைப்பு போதுமான சாவகாசத்துடன் அனுப்பப்பட்டு, பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டு, சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக அம் மகாநாடுகள் கூட்டப்பட வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

விசேஷங்கள்

9. தற்போது நம் சமூகத்தார் செய்து வரும் கல்யாணங்களில் ஊருக்கு ஒரு விதமாக 3,4,5,6 நாள்கள் வரை கல்யாண காலம் நீட்டி வைக்கப் பெறுகிறது. சமீபத்தில் பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார் சங்கத்தில் தீர்மானித்திருக்கிறபடி மூன்று நாட்களில் கல்யாணத்தை நடத்த வேண்டும் என்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

காப்புக் கட்டும் புதுமையை குழந்தை பிறந்த முதலாவது ஆண்டு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்றும். அந்த விசேஷத்தை ஒரே நாளில் கொண்டாட வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தீர்த்தம் குடிப்பது, கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப் புதுமை முதலிய விசேஷங்கள் அவசியமில்லாதன ஆதலால் அவைகளைச் செய்ய வேண்டாமென இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

10. நகரத்தார் சம்பந்தமாக பொதுப்பணங்கள் லக்ஷக்கணக்காக ஒரு சிலரிடம் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் அவற்றை வெளிக்குக் கொண்டு வந்து நகரத்தார் சமூகத்துக்குப் பயன்படும்படி செய்ய சரியான பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு கமிட்டி நியமித்து அப் பணத்தின் பொறுப்பை அக் கமிட்டியினிடம்

ஒப்படைக்க வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

நகரத்தார் சம்பந்தமான நகர விடுதிகள் முதலிய பொது ஸ்தாபனங்களைப் பற்றியும் விசாரித்து அறிவிப்பதற்கு இக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அது சம்பந்தமான சகல விபரங்களையும் விசாரித்தறிந்து நகரத்தாருக்கு அறிவிக்கக் கீழ்கண்ட சப் கமிட்டி ஒன்று நியமிக்கப் பெற்றது. கா.கண.க.வே. வேலாயுதஞ் செட்டியார் (மதகுபட்டி) ராம. அண்ணாமலை செட்டியார் (கோட்டையூர்), ராம. அருணாசலம் செட்டியார் (தேவகோட்டை) இவ்வாறாக **14–11–1936** ஆம் ஆண்டு கோவிலூரில் கூடிய **96** ஊர் நகரத்தார் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

கல்வி உதவி

மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 2002 ஆம் ஆண்டு கல்வி நிதி உதவி அளிக்கப்படுகிறது. கல்வி உதவி விரும்பும் நகரத்தார் மாணவ, மாணவிகள் (6ஆம் வகுப்பிலிருந்து) வடக்குச்சித்திரை வீதியில் உள்ள நகரவிடுதி அலுவலகத்தில் ரூ. 2/– கட்டணம் செலுத்தி விண்ணப்பம் பெற்றபின், பூர்த்தி செய்து தக்க சான்றுகளுடன் 30–6–02 தேதிக்குள் சங்க அலுவலகத்துக்கு கிடைக்குமாறு அனுப்பிடக் கேட்டுக்கொள்கிறோம்.



புதுமனை புகுவிழா...!



சென்னை கீழ்பாக்கத்தில் திருப்பதி செட்டியார் கட்டியுள்ள இல்லத்தின் புதுமனை புகுவிழாவில் நமது ஆசிரியர் குடும்பத்தினருடன் சென்று வாழ்த்திய காட்சி...

திரையுலகில் நகரத்தார்

சுடர்மணிக்கவிஞர்
வேம்பத்தூரர் கிருஷ்ணன்

சென்ற இதழில் கிருஷ்ணா பிக்சர்ஸ் எனக்கு அனுப்பிய முத்திரைக் கடிதத்தை இன்றுவரை பாதுகாத்து வருகின்றேன் என முடித்திருந்தேன். நான் காவேரி படத்தை வாழ்த்தி அனுப்பிய கவிதையின் பூர்த்திப் பகுதியிது.

பூர்த்திப்பகுதியிது...

இத்தனை முத்தனைத்தும்
எழிலுடன் சேர்த்திணைத்து
சத்து நிறை கருத்துகளால்
ஜாஜ்வல்யமாக மின்னும்
முத்தாரம் தனைத் தமிழைப்
பெத்தாளின் மார்பதனில்
அணிந்திட்ட கோமானை
அறியத்தான் வேண்டுமென்றோ
வல்லவர்கள் போற்றிடுவர்
வள்ளலவர் பெயரதனை
வடித்தெடுத்த ஒரெழுத்தால்
வன்மைமிகு "லெ"னா வென்று
அன்னாரை வாழ்த்துகிறேன்
அடுத்துமிது போலபல
இன்னாட்டின் தமிழப் பெண்கள்
ஈடற்ற சரிதம் பல
என்னாளும் படமெடுத்து
ஏற் சிறப்புக் கொள்க என்றே...!

1948 ஆம் ஆண்டிலே நடிக மன்னர் பி.யூ. சின்னப்பா, நவரஸ நடிகையர் திலகம் டி.ஆர். ராஜகுமாரி... ஆகியோர் நடித்த "கிருஷ்ணபக்தி" படமானது பக்தியோடு, பக்தர் வேடத்திலே ஊரை ஏமாற்றும் போலிகளையும் பளிச்செனக் காட்டியது. புதுமையான கதையமைப்புடன்... இயற்கையின் மகத்துவத்தைக் கதையோடு சொன்னது கிருஷ்ணா பிக்சரின் "வனசுந்தரி" சமுதாயப் பிரச்சினையை மையமாக வைத்து உருவான ''மருமகள்'' படத்தின் நாயகன் ஆந்திரப்பிரதேச முன்னாள் முதல்வர் என்.டி. ராமாராவ். சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் பண்பாட்டின் கலைக் களஞ்சியமாக விளங்கிய படம் எம்.ஜி.ஆர். நடித்த "கிருஷ்ணா பிக்சரின்" "மதுரை வீரன்" நாட்டியப்பேரொளி பத்மினி ஆடிய "ஆடல் காணீரோ" என்ற பாட்டுக்கான நடனம் படத்திலே பத்து நிமிடம் இடம் பெற்றது. மதுரை சொக்கநாதரின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் நமது மனத்திரையில் பதித்த ஆடல்பாடல் அது. அந்த நாளின் வசூல் மன்னன்மதுரை வீரன் தான்.

1960–ல் செஞ்சிக்கோட்டை வரலாற்று நாயகனின் கதையைத் திரைப்படமாக்கிய "லெ"னா செட்டியார். அப்படத்திலே புரட்சி நடிகர், இலட்சிய நடிகர், பத்மஸ்ரீ, நாட்டியப் பேரொளி... என்று ஏகப்பட்ட சூப்பர் ஸ்டார்கள்! அந்தப் படல் ரிலீசானதும்... கிருஷ்ணா பிக்சர்ஸ்....!

பொய் வஞ்சம்சூது எதையும் அறியாத
புனிதத் திருக் குலத்தார்
பூவுலகெங்கும் ஓடிப்பறந்து
புகழொடு பொருள் குவிப்பர்!
செய்யும் எதையும் சீர்படச்செய்யவும்
மெய்யர்கள் நகரத்தார்
சேர்த்து வைப்பதில் சீர்கொடுப்பதில்
இவருக்குநேர் வேறு யார்!

தமிழ் திரையுலகிலே தயாரிப்பாளர்களாகப் புகழ் பெற்று வாழ்ந்த நகரத்தார்களிலே குறிப்பிடத்தக்கவர் மானகிரி ஸ்ரீ "லெ"னா செட்டியார். 1960–ல் ரிலீசான அவரது "ராஜ தேசிங்கு" படக் குறிப்புடன் "திரையுலகில் நகரத்தார்" ஐந்தாம் பகுதியை நிறுத்தியிருந்தேன்...

உலக நாடுகளிலேயே அதிகமான புராண இதிகாச சரித்திர வரலாறுகள் கொண்டது நமது இந்தியத் தமிழர் நாடு தான். ஆனால், வரலாற்றுத் திரைப்படங்கள் என்றால் ஏனோ நம்மவர்களுக்குப் பிடிப்பதில்லை! சரித்திரக் குறிப்புகளை பரீட்சை ஹாலுடன் மறந்து விடுவது நமது மாணவ, மாணவியரின் கோட்பாடுகளாகி விட்டது. மதிப்பெண்ணுக்காக மனனம் செய்யப்படும் வரலாற்று நாயகர்களான தேசிங்கு ராஜன் மஹமத்கான்களை... மையமாகக் கொண்ட "ராஜா தேசிங்கு" படம் சரியாக ஓடவில்லை! லட்சக்கணக்கில் செலவிட்டு, பிரமாண்டமான தயாரிப்பு என வெளியிடப்பட்ட அந்த நாளிலே (1958) கோடியைக் கொட்டி எடுக்கப்பட்ட உண்மையாக பிரமாண்டமான வரலாற்றுப் படமான "ராஜா தேசிங்கு" கிருஷ்ணா பிக்சர்ஸுக்கு ஒரு(சோ)தனை தான்!

அந்த நாளிலே ஒவ்வொரு சினிமாக் கம்பெனியும், பழங்கால "பாய்ஸ் கம்பெனி" போல கட்டுப்பாட்டுடன், பந்தபாசத்துடன், பக்தி நேசத்துடன் விளங்கின. சினிமா என்பது... காலநேரம் இல்லாத ஒருதொழில். காலையில் 7 முதல் 1, நடுப்பகல் 2 முதல் 9, இரவு 10 முதல் 5, இப்படியாக இருபத்தி நாலு மணிநேரமும் சினிமாக்காரர்கள் இயங்கியாகவேண்டி இருந்தது. அந்த நாளிலே, அதிலும் என்னைப் போன்ற துணை டைரக்டராக இருந்த, இருப்பவர்கள், புரொடக்ஷன் மானேஜர்கள், மேக்கப், காஸ்டியூம், புரொடக்ஷன் உதவியாளர்கள் இப்படி "ஸ்டார் வேல்யூ" இல்லாத விளம்பரம் கிடைக்கப் திரைப்பட அஸ்திவார ஊழியர்கள் ஊண் உறக்கம் இழந்து வாழ்ந்தது வாழ்வது சினிமாக்காரனின் தலைவிதியாக இருந்தது. - வரும்

★ *பள்ளிகளில் தேர்வு எழுதும் முறையை முதன்முதலாக அறிமுகப்படுத்திய நாடு சீனா.*

★ *மணியார்டர் (பண அஞ்சல்) அனுப்பும் முறையை முதன் முதலாக அறிமுகப்படுத்திய நாடு அமெரிக்கா.*

★ *சென்னை சிறைச்சாலையின் வயது 165.*

புதையல் : 18

மெத்தப்பரான முத்தப்பர்

பழநிக்கு செல்லும் வழியில் "எரசு நகரம்" என்று ஓர் ஊருண்டு. அந்த ஊர் ஒரு குறுநில மன்னரின் (ஜமீந்தார்) ஆட்சிக்கு உட்பட்டு சிறப்பாக இருந்தது. அதையும் அதைச் சுற்றிலுமுள்ள ஊர்களையும் இம்முடிலிங்கேந்திரன் என்னும் நாகேந்திரன் ஆண்டு வந்தான். அவர் எதையும் லட்சியம் செய்யாமல் துடுக்குத் தனமாகப் பேசும் முன்கோபக்காரர். அவர் வெண்பாப்புலிக் கவிராயரை பெரிதும் ஆதரித்து வந்தார். ஜமீந்தாரின் ஆட்சி மேன்மையடைய வேண்டுமென எண்ணிய வெண்பாப்புலியார் ஒரு பாடற் புனைந்து ஏரசு நகரத்தைச் சேர்ந்த எல்லா ஊர்ப் பொது இடங்களிலும் எழுதி வைத்தார்.

அப்பாடல்:

இம்முடிலிங்கேந்திர துரைக் கேற்க நடந்தவர்கள்

தம் முடி கொண்ட யுலகில் தாம் வாழ்வர்

இதனை பழநிக்குச் சென்று வருவதற்காகத் தனது மாணவர் குழுவினருடன் சமுத்திரப்பட்டி கோகிலாப்பட்டிச் சத்திரத்திற்கு வந்து தங்கிய முத்தப்ப அய்யா அவர்கள் கண்டு மிக வருந்தினார்கள். ஒரு காலத்தில் ஜமீன் இருந்த செழிப்பான நிலை நினைவிற்கு வந்து தொப்ப வீரன் என்பவரைக் கொன்றதனாலல்லவா இப்போது ஜமீன்தார் மெலிந்து நலிந்து விட்டார். இந்த இம்முடி லிங்கேந்திரனையும் வெண்பாப்புலியாரின் அறிவு புகழுகிறதென்றால் அவரக்குப் பொன் பொருள் மீதுள்ள ஆசையல்லவா காரணம் என்றெண்ணியவராய் அப்பாடலின் அடியில்:

-சும்மாவே

தப்பிற்றலை யிழப்பர் சாட்சியொன்று வேண்டுமெனில்

அப்பனெனும் தொப்ப வீரனாம்

இதை எழுதினேன் கீழச்சிவப்பட்டி அழகப்ப செட்டி முத்தப்பன், என எழுதி வைத்துவிட்டுப் பழநிக்குச் சென்று ஊர் திரும்பினார். நினைத்ததை எழுதிவிட்டாரே தவிர "வெண்பாப் புலியாரும் அறம் பாடுவதில் வல்லவரான பெரியவராயிற்றே? அப்படி அவர் வசைக்கவி பாடி விட்டால் பெருந்தீங்கல்லவா விளையும்?" என எண்ணியவராய் வீட்டிலுள்ளவர்களிடம் தகவலைச் சொல்லி விட்டு வெண்பாப்புலியாரின் உறவினரும் தமக்கு மிகவும் வேண்டிய நண்பருமான மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

இம்முடிலிங்கேந்திரன் முத்தப்ப செட்டியார் எதிர்க்கவி எழுதி வைத்திருக்கும் செய்தியை வெண்பாப்புலிக்குச் சொல்லியனுப்பினார். செய்தி கேட்டு வெண்பாப்புலியார் வஞ்சினம் கொண்டவராய் எரசு நகருக்கு வந்து, "அரசே! பதறாதீர்கள்! என் கவிக்கு எதிர்ககவி எழுதிய சிறுவனை உங்கள் முன் அடிமையாக்கிக் கொண்டு

வந்து காட்டுகிறேன்'' என்று சூளுரைத்தவராய் கீழச்சிவல்பட்டிக்குப் பயணமானார்.

வெண்பாப்புலியார் பெண் எடுத்த ஊர் மிதிலைப்பட்டி. அழகிய சிற்றம்பலக் கவிராயர் மரபைச் சேர்ந்த வேலுக் கவிராயர் இவருக்கு மருமகன் முறைகாரர், வெண்பாப்புலியாரை சிவகங்கை, புதுக்கோட்டை இராமநாதபுரம் சமஸ்தானாதிபதிகள் ஆதரித்து வந்தனர். இவருடைய சந்ததியார் இப்போதும் செவ்வூர், மிதிலைப்பட்டி என்னும் ஊர்களில் வசித்து வருவதாகத் தெரிகிறது. வெண்பாப்புலி வசை பாடுவதில் வல்லவர். திட்டமான வாக்குப் பலிதம் கொண்டவர். அவருக்குக் கோபம் வந்தால் எவராலும் மாற்ற இயலாது. இத்தகு பெருமைகள் வாய்ந்த வெண்பாப்புலியார் தோல்வியைச் சுமந்து செல்வதற்கென்றே பல்லக்கிலேறி கட்டியம் கூறிக் கொண்டு தனது படைவிருதுகளுடன் கீழச்சிவல்பட்டிக்குக் கிளம்பினார்.

"வெண்பாப்புலியார் வாழ்க" என்ற கட்டிய முழக்கத்துடன் முத்தப்ப செட்டியார் வீட்டு வாசலில் பல்லக்கு வந்து நின்றது. பற்களை நறநறவெனக் கடித்தவாறே "எங்கே முத்தப்பன்" என்றார் வெண்பாப்புலி, "செட்டியார் மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர் வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள்" என்று வீட்டிலுள்ளவர்கள் சொல்ல பல்லக்கு மிதிலைப்பட்டி நோக்கிச் சென்றது.

பழங்காலப் புலவர்களிடத்திலே கட்டியக்காரர்கள் இருப்பார்கள். வேலுக் கவிராயர் வீடு வந்ததும் வெண்பாப்புலியின் கட்டியக்காரன் "புலி வருது புலி வருது!" என்று கோஷமிட்டான். வேலுக் கவிராயரின் கட்டியக்காரன் முத்தப்பர் சொல்லி வைத்திருந்தது போல் "புலிவந்தாலென்ன வேலிருக்குது வேலிருக்குது" என்று உரக்கச் சப்தமிட்டான். (வீடு வேலுக் கவிராயர் வீடல்லவா?) உடனே வெண்பாப் புலியாருக்கு 'சுருக்' என்று பதட்டம் மேலிட பல்லக்கை விட்டிறங்கி வீட்டிற்குள் நுழைந்தார். வேலுக் கவிராயர் எதிர்கொண்டு வணக்கம் கூறி வரவேற்றார்.

வேலுக் கவிராயர்

மாமா வாருங்கள்! வாருங்கள்! அத்தி பூத்தது போலிருக்கிறதே! திடீரென இங்கெழுந்தருளியது நாங்கள் செய்த பாக்கியம்.

வெண்பாப் புலியார்

(மீசை படபடக்க) வேலு! பேசுவதற்கு இதுவல்ல நேரம்? முத்தப்பன் இங்கே வந்தானா? எங்கே அவன்? உடனே வரச் சொல். என் பாட்டை மறுத்து எழுதி விட்டு மூலைக்குப் போய் ஏன் பதுங்குகிறான்? வரச் சொல் வெளியிலே.

வேலு

பதறாதீர்கள் மாமா! எதற்காக இவ்வளவு ஆத்திரமும் அவசரமும்! வெளியே சென்றிருக்கிறான், விரைவாக வந்து விடுவான். வயதிற் சிறியவனான முத்தப்பனோடு ஏன் வம்புக்குப் போகிறீர்கள்? அவனும் தவறான வேலைக்குப் போக மாட்டானே? முத்தப்பனுக்கும் வாக்குப் பலிதம் உண்டு. ஆனால் நீங்கள் எடுத்ததும் அறம் பாடி விடுவீர்களோ என அஞ்சுகிறான். வேறொன்றுமில்லை. படித்த மேதாவிலாசம் கொண்ட நீங்கள் இருவரும் சண்டையிட்டுக் கொள்வதும் நன்றாயில்லை. நீங்கள் எனது நெருங்கிய உறவினர். முத்தப்பன் எங்கள் குடும்ப நண்பன். போனது போகட்டும் நடந்ததை மறந்து விட்டு இனிமேல் ஒன்றுபடுங்கள்.

வெண்பாப்புலி

(நானும் முத்தப்பனும் சமதையாமே. இருக்கட்டும் இவனை ஒரு பாட்டுப் பாடச் சொல்லி மட்டம் தட்டுவோம் என்ற எண்ணத்துடன்) சரி, வேலு! முத்தப்பன் வரும் வரையில் நாம் எதிர்ப்பாட்டுப் பாடுவோம். எங்கே எதிர்ப்பாட்டைச் சொல்லு!

"கூறிய வியாழனில் குவையில் வெங்கலம் வைத்து

இராமுப்பது முருக்கினால் விடிந்தால் வெள்ளியாமே!"

வேலு

ஏன் மாமா நமக்குள்ளேயும் போட்டியா?

வெண்பாப்புலி

போட்டியில்லை; பொழுது போக்குத்தான். (வேலுக் கவிராயர் பாடாமலிருக்கவே மாடியிலிருந்த முத்தப்பர் மேலே இருந்தபடியே பாடினார்:)

"ஆதித்த ஞாயிறில் ஐந்தாறு காஞ்சிரங்காய் கொண்டு வந்து

அவிழ்தம் பண்ணினால் விடிந்தால் திங்களாமே"

(பாட்டிலே சரிக்குச் சரியான எதிர்ப்பு)

வெண்பாப்புலி

அடே! முத்தப்பா வெளியில் வா!

வேலு

மாமா! நான் வரச் சொல்லுகிறேன். ஆனால் நீங்கள் அறம் பாடுவதில்லை, என்று வாக்குறுதி தரவேண்டும்.

வெண்பா

வரச் சொல்! அறம் பாடுவதில்லை (முத்தப்பர் இறங்கி வருகிறார். வேலுக் கவிராயர் வீட்டுக்கு வெண்பாப்புலிக் கவிராயர் வந்திருப்பதும் முத்தப்பருக்கும் அவருக்கும் வாது நடைபெறப் போகிறது என்ற செய்தியும் கேள்வியுற்ற அவ்வூர் மக்கள் வேலுக் கவிராயர் வீட்டுக்கு முன்பாகத் திரண்டு விட்டார்கள். உரையாடல் தொடர்கிறது)

வெண்பாப்புலி

டேய்! நீதான் முத்தப்பனா? நீதானே எரசு நகரத்தில் எழுதியிருந்த நம்முடைய பாட்டை முடித்தெழுதியவன்?

முத்தப்பர்

ஆம். ஆனால் நான் ஒரு தவறையும் செய்யவில்லை. தன்னை நம்பியவனைக் கொலை செய்த இம்முடிலிங்கேந்திரனை நீங்கள் போற்றியது சரியல்ல என்று நினைத்து மறுப்பெழுதினேன். என்ன தவறு இருக்கிறது இதில் ?

வெண்பாப்புலி

அப்படியா ? வெண்பாப்புலி எழுதிய பாட்டை மறுத்து எழுதுவதை விடப் பெரிய தவறு கூட இருக்கிறதா ? (கடகடவென்று சிரிக்கிறார்) சரி. உட்கார்ந்து கொள்

முத்தப்பர்

ஒரு கொலைகாரரை எதிர்த்து எழுதியதற்காக என்னோடு வாதாட வந்திருக்கிறீர்களா ? அப்படியானால் வேலையைத் துவங்கலாமே!

(வெண்பாப் புலியின் முகம் சுண்டுகிறது)

வெண்பாப்புலி

சரி. அவ்வளவு துணிச்சல் இருக்கிறதா உனக்கு ? என் திறமை உனக்குத் தெரியுமா ? நாங்கள் தலைமுறை தலைமுறையாகப் புலவர்கள். தமிழ்த் திறமை எங்கள் உரிமைச் சொத்து. நீயோ நேற்று வந்த காளானைப் போன்ற புலவன். உன்னால் என்னை வெல்ல முடியுமா ? வெற்றி பெறுவாயா ?

முத்தப்பர்

காலம் பொன்னிலும் பெரியது. வீண் பேச்சுக்கள் வேண்டாம். வாதாடுவதானால் காலத்தைக் கடத்தாமல் இப்பொழுதே நீங்கள் உங்கள் வாதத்தைத் துவக்கலாம்.

வெண்பாப்புலி

சரி. துவங்குகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை இருக்கிறது. அதன்படி நீ தோற்றால் எனக்கு அடிமை, சரிதானே ?

முத்தப்பர்

சரிதான். நீங்கள் தோற்றாலோ... ?

வெண்பாப்புலி

அப்படி நடக்காது! ஒரு வேளை நேரிடுமானால் நான் உனக்கு அடிமை மாதிரிதான்.

முத்தப்பர்

ஏன் தயக்கம் ? மாதிரியென்ன ? அடிமைதானே ? போகட்டும். போட்டியைத் தொடங்குங்கள்.

வெண்பாப்புலி

(எதிரே தூணில் கட்டியிருந்த ஆட்டுக் கடாவைச் சுட்டிக்காட்டி) முத்தப்பா இந்தக் கடாவின் தலையை வெடிக்க ஒருவர் பாட வேண்டும். மற்றவர் ஒட்டப் பாட வேண்டும். நீ வெட்டப் பாடுகிறாயா ? ஒட்டப் பாடுகிறாயா ?

வேலு (குறுக்கிட்டு) செட்டியார்களுக்கே இரக்கம் மிகுதி. தவிரவும் ஒட்டப் பாடுவதுதான் திறமையானது. ஆகவே, மாமா நீங்கள் வெட்டப் பாடுங்கள். முத்தப்பன் ஒட்டப்

பாட்டும் சரிதானே?

முத்தப்பர்

சரி. வெண்பாப் புலியார் பாட்டும்.

வெண்பாப் புலியார் கலைமகளை வணங்கி ஒலையில் பின்வரும் பாட்டை எழுதிக் கடாவின் தலையில் வைத்தார். வெண்பாப்புலியின் பாட்டு:

எற்கவிக்கு நேரே எதிர்க்கவியும் செப்புதற்கோர்

பொற்கவியுமுண்டோவிப் பூவுலகில்? நற்கவி சொல்

வேலுக் கவிராயர் வீட்டுக் கடாத் தலையே

சால இரு துண்டாவாய்தான்.

கடா, கதறி தலை இரண்டு துண்டுகளாக வெடித்து விட்டது. பூமியிற் கிடந்து புரளுகிறது.

இக்கோரக் காட்சியைக் கண்ட முத்தப்பர் கண்களில் நீர் ஆறாகப் பெருக, அடியார்க்கு அடியவனான குன்றக்குடி ஆறுமுகப் பெருமானை நினைத்து வழிபட்டு அடியிற் கண்ட பாடலை ஓர் ஓலையில் எழுதி கடாவின் தலைப் பிளவிலே வைத்து திருநீறிட்டதும் தலைப்பிளவு சேர்ந்துவிட்டது. ஆட்டுக்கடா துள்ளி எழுந்து உடலை ஒரு குலுக்குக் குலுக்கியது.

கலையது படித்த வெண்பாக் கவிப்புலி கவியைக்கேட்டுத்

தலையது துணிப்புண்டாடு தவிக்கிறதந்தோ முன்போல் நிலையது பொருந்த வேண்டி

நிகழ்த்தினேன் முத்தப்பன்யான்.

உலகினில் உள்ளோர் காண்பீர்

உமையவள் சுதன் காப்பாமே

(பாட்டைப் பலமுறை பாடினால் அதன் உருக்கம் தெரியும்)

மயக்கம் தெளிந்த ஆட்டுக்கடா பழி தீர்த்துக் கொள்ள நினைத்து வெண்பாப் புலியார் மேல் மூர்க்கத்தனமாகப் பாய்ந்தது. அவர் அஞ்சி விலகியோடினார். பணியாள் ஆட்டைப் பிடித்துக் கட்டினான். மூவரும் உட்கார்ந்தனர்.

வெண்பாப்புலி

(தன் கையில் அணிந்திருந்த தங்கக் கடயத்தைக் கழற்றி) முத்தப்பா! நான் தோற்றேன். இன்று முதல் உனக்கு நான் அடிமை. முத்தப்பனல்ல நீ, என்னைப் பெத்தப்பன் (பெற்றப்பன்) இந்தா! நான் பெற்ற தங்கக் கடயம்.

வேலு

ஏன் மாமா! ஒரேயடியாய்த் தணிந்து விட்டீர்களே! (முத்தப்பரும் வேலுக் கவிராயரும் சிரிக்கிறார்கள்)

முத்தப்பர்

நீங்கள் எனக்குத் தோற்றது கூட தேவலை ஆனால் ஆட்டைக் கண்டு அஞ்சினீர்களே? அதுதான் வேடிக்கை.

"பாட்டுக்குப் புலி பயந்து பதுங்கியது போதாமல்

ஆட்டுக்கும் புலி பயந்தால் ஆர் தாம் நகையார்கள்?"

வேலு

மாமா! நான் பாட்டை முடிக்கிறேன்.

காட்டுப்புலியத்து போல் கவிபுகலும் நம்பிடத்தோர்
வீட்டுப்புலியானார்; வெண்பாப்புலியானார்

வெண்பாப்புலி

சரி முத்தப்பா! கடயத்தையும் என்னையும் ஏற்றுக் கொள்ள ஏன் மறுக்கிறாய். ஏற்பதுதான் முறை.

முத்தப்பர்

வெண்பாப்புலியாரே! உங்களுடைய வயதென்ன? உயர்ந்த நிலை என்ன? மேதைத்தன்மை என்ன? சிறந்த கவிஞரான உங்களை நான் அடிமை கொள்வதா? மனிதனை மனிதன் அடிமை கொள்ள என்ன இருக்கிறது? என்னை வேண்டி உங்களுக்கு அடிமைகளாக இருக்கும் புலவர்களையெல்லாம் விட்டு விட்டால் நான் பெரும் மகிழ்ச்சியடைவேன். இதுதான் நான் உங்களிடம் வேண்டுவது!

வெண்பாப்புலி

(கண்களிலே இன்ப நீர் ததும்ப) "முத்தப்பா!" நீ வயதிலே எனக்கு இளையவன். ஆனால் அறிவிலும் பெருந்தன்மையிலும் என்னை மிஞ்சியவனாகிவிட்டாய்! உனக்கு இன்னா செய்யவிருந்த என்னை உன்து நன்னயத்தால் ஒறுத்துவிட்டாய்! 'இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற குறளைச் சொல்லளவிலே கேட்டிருந்தேன். ஆனால் இன்று நீ அதைச் செயலளவிலே மெய்ப்பித்துக் காட்டி விட்டாய்! கபிலரைப் போன்ற பேரறிவு படைத்தவனே! நக்கீரன் போன்ற பெரும்புலவன் தனது பாவலிமையால் ஆயிரம் பேரைப் பேயின் வாய்ப் பெருஞ்சிறையிலிருந்து தப்புவித்தான். நீயோ என் கையில் அகப்பட்ட அநேகரை அடிமைத் தளையிலிருந்து அகற்றிவிட்டாய்! உன்னுடைய பெருந்தன்மைக்கும் அளவுதானில்லையா? பலரை அடிமை கொண்ட என்னை அடிமை கொள்ளாது விடுகின்றாய்! நான் என்னிடத்தில் அகப்பட்டவர்களை— அதுவும் உன் பொருட்டாக விடுகின்றேன். ஆனால் ஐயோ! உன் பெருந்தன்மையால் என்னை உனது அன்பெனும் செயலால் என்னை மீளாச் சிறையில் அடைத்து விட்டாய். 'நீ! நீடூழி வாழ்க' என்று வாழ்த்த நான் யார்? உனது தெய்வமான வைதாரையும் வாழ வைக்கும் செட்டி முருகன் உனக்கு வற்றாத செல்வமும் வளர்வழியா வாழ்க்கையும் தருவானாக! நின் புகழ் வானிலும் மலர்வதாக! வளர்ந்து சிறப்பதாக" என்று வாழ்த்தினார்.

சண்டையும் சச்சரவும் புலவர்களின் பரம்பரைச் சொத்து என்பதற்கு பாடுவார் முத்தப்பர்... வெண்பாப்புலி கவிராயர் இவர்களின் தமிழ் தர்க்க விளையாட்டு சுவைதானே!

— ஆசிரியர்